# GOLDEN JUBILEE

## Lanka
## Siddha Ayurvedic Medical College
## JAFFNA

1925 1980

லங்கா

## சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி

யாழ்ப்பாணம்

# ன் விழா மலர்

615.53
யாழ்

லங்கா ஆயுர்வேத வைத்தியக்
கல்லூரி பொன்விழாவிற்கு
எமது உளங்கனிந்த
வாழ்த்துக்கள்

2197

ஆயுர் டாக்டர் வ. சின்னப்பு
ஆனந்தஜோதி வைத்தியசாலை
கெல்.ஸ்மன் லேன்
சாவகச்சேரி

INDRAPALA COLLECTION
EVELYN RUTNAM
LIBRARY
JAFFNA



# *Message from the*

## *DHARMASENA ATTYGALLE*

Minister of Indigenous Medicine

The Lanka Siddha Ayurvedic Medical College of Jaffna, a premier place of learning in the field of Indigenous Medicine in Sri Lanka, celebrates its Golden Jubilee this year. It is a happy consideence that in the same year a decision has been made by His Excellency, the President of Sri Lanka, to set up a Project Ministry to be in charge of the subject of Indigenous Medicine.

Ever since it was founded by the pioneer health educationist, Dr. J. Bastiampillai, in 1925, the Lanka Siddha Ayurvedic Medical College of Jaffna has been in the forefront of the struggle for the resurrection of the Indigenous Systems of Medicine in this Country. Its services have been of great benefit to the pepie of Sri Lanka. In recognition of the important place it occupies in the hierachy of health education in Sri Lanka, it has been accorded special status by the Department of Ayurveda in the conduct of its examinations.

I am cofidennt the College will continue in the years to come, to perform the useful services it rendered to the people and play its proper role in the development of Indigenous Medicine in this Country.

I take this opportunity to wish the College a prosperous future and the Organisers of its Golden Jubilee every success in their celebrations.

EVELYN RI STITUTE
218
REFER E
LIBRARY

# Message from the



**P. B. WANNINAYAKE**
Commissioner for Ayurveda

It gives me great pleasure to associate myself with the celebrations on the occasion of the Founder's Day and fifty fifth anniversary of the Lanka Siddha Ayurvedic Medical College, Jaffna.

This set of learning, a pioneerning effort of its kind in Sri Lanka owes its origin to Dr. J Bastiampillai. During the 55 years of its existence it has produced hundreds of Ayurveda practitioners whose service have been of great significance not only to the people of Jaffna Peninsula, but also the Country as a whole.

The resources at the disposal of the college are limited. The handicaps in the way of its progress are numerous. The efforts of the present Principal and the members of his staff are therefore all the more commendable.


I am happy to note that my Department works in close collaboration with the college. Particular mention must be made of the fact that the Department of Ayurveda has taken upon itself the task of holding the examination for the college.

The college deserves the co-operation of all those who have an interest in the development of the ayurveda system of medicine. I wish the college every success in its great endeavour.

18th March, 1980
Department of Ayurveda,
Colombo 8.

INDRAPALA COLLECTION
OF THE
EVELYN RUTNAM INSTITUTE
LIBRARY
JAFFNA

Father of Siddha System of Medicine



சித்த வைத்தியத்தின் தந்தை

# *Message from*

**U. B. Wijekoon**
District Minister & M. P. for Dambadeniya.

*It gives me great pleasure in giving this message of blessing to The Sri Lanka Siddha Ayurvedic Medical College when it celebrates the Founder's Day and 55th Anniversary commemoration.*

*The Sri Lanka Siddha Ayurvedic Medical College is the oldest institution of this kind in the Island and it has rendered valuable service during the last fifty five years.*

*All of us have to fondly remember the founder of the College Dr. J. Bastianpillai and I am thankful to the Golden Jubiles Committee for making arrangements to remember him in a great manner.*

மாவட்ட அமைச்சின் செயலாளரும்,
யாழ். அரசாங்க அதிபருமான,

## யோகேந்திரா துரைசுவாமி அவர்களின்
## ஆசிச் செய்தி

யாழ்ப்பாணத்திலே அமைந்துள்ள லங்கா சித்த-ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியின் நிறுவகர் தினவிழாவும், அது அமைக்கப்பட்ட ஐம்பத்தைந்தாவது ஆண்டு விழாவும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளதாக அறிகின்றேன். ஒரு வைத்தியக் கல்லூரியின் நீண்ட கால சாதனையாக இந்த வைபவத்தினை நாம் கருதலாம். எனவே இந்த வைபவம் எல்லா விதங்களிலும் சிறப்பாகவும், மேலும் செயலுக்குத் தூண்டுவதாகவும் அமைய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

இவ் வைபவம் தொடர்பாக ஒரு மலரும் வெளியிடப்படுவது பொருத்தமானதே. சாதனைகளையும், புதிய சிந்தனைகளையும் வெளிப்படுத்துகின்ற இம் மலருக்கு ஆசியுரை வழங்குவதிலும் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

# வண.பிதா சே. தனிநாயகம் அவர்களின் ஆசிச் செய்தி

யாழ் நகரில் அமைந்துள்ள ஆயுள்வேதக் கல்லூரி பொன் விழா எடுக்கும் இக் காலத்தில் அக் கல்லூரியையும் ஆசிரியரையும் மாணவரையும் வாழ்த்துவதில் நான் மகிழ்ச்சி கொள்கின்றேன். இக் கல்லூரி ஈழநாட்டின் வடதிசையில் நிகரற்ற பணிபுரிந்து வருகிறது. இதன் வரலாறு தமிழ் மக்களுக்குப் பெருமை அளிக்கிறது.

காலடைவில் மக்கள் நம் நாட்டின் மருத்துவத்தில் வளரும் நம்பிக்கை வைத்து வருகின்றனர். மேல்நாட்டு மருந்து வகைகள் அருகிவரும் காலத்தில் நம் நாட்டு மருந்திற்கு புதிய செல்வாக்குண்டு. மேலும் மேல்நாட்டு மருத்துவ ஆராய்ச்சியாளரே சித்த மருத்துவத்தின் மாண்பைப் போற்றி வருகின்றனர்.

இக்கல்லூரி மாணவரை பயிற்றுவதுடன் சித்த மருத்துவத்தின் ஆராய்ச்சியிலும் ஈடுபட்டுவந்துள்ளது. நம் தமிழ் மாவட்டங்களில் எத்தனையோ பழைய மருத்துவ ஏடுகள், சுவடிகள் குடும்பங்களில் காப்பாற்றப் பெற்று வருகின்றன. இவற்றைத் திரட்டி காப்பாற்றி பதிப்பிப்பது பெரும் தொண்டாகும்.

இக்கல்லூரி முதல்வர் சுகந்தன், Dr.சுகந்தன் இன்னாசித்தம்பி பெரும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மரபில் தோன்றியவர் இவர் தலைமையில் கல்லூரி மேலும் வளர்ந்து அரும்பணியாற்ற வேண்டுமென்று இறைவன் திருவருளை வேண்டி நிற்கின்றேன்.

பண்டத்தரிப்பு,
19-3-80.



## கலாசாலைக் கீதம்

வாழிய என்றே வாழ்த்துவம் நன்றே - வைத்திய மாணவர் இன்றே
வையகம் உய்திடும் அன்றே.

வைத்திய நாதன் தன்வந்திரி அருள் வழங்கிடும் எங்கள் கல்லூரி.
அங்கு வைத்திய நுண்கலை வானுற ஓங்கி வளர்ந்திட வைக்கும் கல்லூரி
(வாழிய)

ஈழத்தொரு தனி ஆதித்தாபனம் எங்கள் வைத்தியக் கல்லூரி
உயிர் வாழத்துடிப்பவர் வேதனை நீக்கிடும் பஸ்தியான் பிள்ளையின் கல்லூரி
(வாழிய)

எண் ஐந்து பத்தாண்டு எழில்பெற இயங்கும் எங்கள் வைத்தியக் கல்லூரி
உயர் தன்னலம் அறியா தத்துவக்குருக்கள் தாங்கிடும் எங்கள் கல்லூரி
(வாழிய)

இங்ஙனம் எங்கட்கிறைவனளித்து இலங்கிடும் இச்செல்வம்
என்றும் அங்ஙனம் எங்கள் ஆண்டவன் அருளால் ஆசிபெற்றோங்கிடவே.
(வாழிய)

# வருந்துகின்றோம்

வட இலங்கை சுதேச வைத்திய சபையின் நீண்டகால அங்கத்தவராகவும், அதன் உப தலைவராகவும் இருந்து நம் கல்லூரிக்கு அருந்தொண்டாற்றிய




வைத்திய கலாநிதி வல்லிபுரம் குமாரசாமி அவர்கள் அண்மையில் எம்மைவிட்டு பிரிந்து இறையடி சேர்ந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டும் வேளையில், அன்னாரின் பிரிவினால் வாடும் குடும்பத்தினருக்கும் எம் அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

வட இலங்கை சுதேச வைத்திய சபை
தலைவரும் இயக்குநர்களும்



**Dr. J. Bastiampillai**

Founder of the Lanka Ayurvedic Medical College & Siddha Institute.
JAFFNA



Dr. R. E. W. JEHORATNAM.

PRINCIPAL

&

President - N. C. B. I. M

## இலங்கை ஆயுர்வேத சித்த வைத்தியக் கல்லூரி - வரலாறு யாழ்ப்பாணம்.

இக் கல்லூரியானது இத் தீவின் கண்ணே முதன் முதலாக ஸ்தாபிக்கப்பட்டதென்பது யாவருமறிந்த உண்மையாகும். இப்பெருமையைப் பெற்ற கல்லூரியானது காலஞ் சென்ற வைத்திய கலாநிதி ஜே. பஸ்தியாம்பிள்ளை அவர்களால் 1925-ம் ஆண்டு வைகாசி மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அந்தஸ்தாபகருடைய ஞாபகம் என்றும் எங்கள் உள்ளங்களை விட்டகலாதென்பது திண்ணம். அரசாங்கத்தின் உதவியோ அல்லது பொதுமக்களின் உதவியோ சிறிதேனும் இல்லாது தன் பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டுக் கல்லூரியையும் அத்துடன் ஓர் வைத்தியசாலையையும் அமைத்தார். வைத்திய சாஸ்திரத்தை முறையாகவும் சாஸ்திரீகமாகவும் கற்கவிரும்புவோர்க்கு இந்த ஸ்தாபனமானது ஓர் வரப்பிரசாதமாகவிருக்கின்றது.

எம்நாட்டு வைத்திய மாணவர்கள் தூர தேசங்கட்குச் சென்று அதிக பொருட் செலவோடு முறையாக வைத்திய சாஸ்திரத்தைக் கற்க வசதியீனமாகவிருப்பின், அவர்களுக்கு குறைந்த செலவோடு இந்நாட்டிலேயே கற்பதற்கு இக் கல்லூரி மிகவும் வசதியளிக்கின்றது. வைத்தியம் கற்கும் மாணவர்கள் நோயாளிகளை நேரிற் பார்த்து நோயை நிதானித்து அவற்றிற்குத் தகுந்த சிகிச்சை புரியும் வகையை அப்பியாசப் படுத்திக் கொள்ளும் வைத்தியசாலையும் கல்லூரியுடன் அணைத்து நிறுவப்பட்டது. அன்றியும் வைத்திய மாணவர்கள் ஔடத சாலையும் இவற்றுடன் நிறுவப்பட்டது. இக் கல்லூரியிலே வைத்தியத்தைக் கற்பிப்பதற்காக இந்நாட்டுச் சில சிறந்த வைத்தியர்களையும், இந்தியாவிலிருந்து சில மேதாவிகளையும் வரவழைத்து விரிவுரையாளர்களாக ஏற்படுத்தினர்கள்.

கல்லூரியின் ஸ்தாபகர் தமது இறுதிகாலத்திலேயே, கல்லூரியைப் பரிபாலஞ் செய்யும் பொருட்டு ஓர் முகாமைச் சபையை நிறுவி, அதற்கு "வட இலங்கை சுதேச வைத்திய சபை" என்னும் பெயரிட்டு, கல்லூரியின் பொறுப்பு முழுவதையும் சபையின் மேற்பார்வையிலேயே விட்டார். ஸ்தாபகர், காலஞ்சென்ற பின் இம் முகாமைச் சபைக்கு கௌரவ, வைத்திலிங்கம் துரைசுவாமி, கலாநிதி ஐசாய்க் தம்பையா, செனற்சபை உறுப்பினர், எஸ். நடேசபிள்ளை, முதலியார் முத்துத்தம்பி, சட்டத்தரணி அ. விசுவநாதன் போன்ற பெரியார்கள் தலைமை வகித்துச் சென்றுர்கள். இக் கல்லூரியின் வருடாந்தப் பரீட்சையை இந்தியாவில், காலஞ் சென்ற பண்டிதர் மே. துரைசுவாமி ஐயங்காரின் தலைமையிலுள்ள ஓர் சபையே நடாத்தி வந்தது. இக் கல்லூரியில் கற்றுத்தேறிய பட்டதாரிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டுமல்ல, இத்தீவின் பல பாகங்களிலுமிருந்து தங்கள் தொழிலைச் செவ்வனே நடாத்துகின்றுர்கள் சிலர் மிகவும் பிரபல்யமான வைத்தியர்களாகவும் திகழ்கின்றனர். இன்னும் சிலர் உள்ளூராட்சி மன்றங்களால் நடாத்தப்படும் இலவச வைத்திய சாலைகளிலும் உத்தியோக நியமனம் பெற்றுக் கடமையாற்றுகின்றனர்.


இக் கல்லூரியின் சேவையை நேரில் பார்த்த தேசாதிபதி கௌரவ கேர்பேட் ஸ்ரான்லி, கௌரவ பொன் இராமநாதன், கௌரவ கே. பாலசிங்கம் போன்ற பெரியோர்கள், மிகவும் பாராட்டிச் சென்றனர். சில பாராளுமன்றப் பிரதிநிதிகளும் சில சுகாதார அமைச்சர்களும் கூட கல்லூரிக்கு வருகைதந்து அதன் சேவையைப் பாராட்டிச் சென்றனர். கொழும்பு சுதேச வைத்திய அதிகாரசபையின் தலைவராகவிருந்த R.S.S. குணவர்த்தன அவர்கள் இக்கல்லூரிக்கு இருமுறைகளாக வருகை தந்தபின் கல்லூரியின் சேவையைப் பாராட்டியதுடன் நில்லாது அரசாங்கம் இக்கல்

லூரியை அங்கீகாரஞ்செய்து, இதில் கற்றுத்தேறிய பட்டதாரிகளை எவ்வித பரீட்சையுமின்றி பதிவு செய்யவேண்டுமென்றும் சிபார்சு செய்தார். இதன்பலனாகவே இக் கல்லூரியை அரசாங்கம்' 1951ம் ஆண்டு ஆடிமாதம் 13ந் திகதி, பதிவுசெய்து அரசாங்க வர்த்தமானியிலும் பிரகடனப்படுத்தியது. அதன் பின்னர் ஆண்டுதோறும் பட்டதாரிகள் பரீட்சையின்றியே பதிவு செய்யப்பட்டு வந்தனர். பத்து ஆண்டுகளின் பின்னர் பாராளுமன்றத்தில் ஓர் புதிய ஆயுர்வேதச் சட்டத்தைக் கொண்டுவந்து அதை நடைமுறைப் படுத்தவேண்டுமென்றும் தீர்மானித்தனர். துர்அதிஷ்டவசமாக இதன் பி னரே கல்லூரியின் அங்கீகாரம் நீக்கப்பட்டது. இழந்த அங்கீகாரத்தை மறுபடியும் கல்லூரிக்குக் கொடுக்கவேண்டுமென்று முகாமைச்சபையினர் ஆயுர்வேத திணைக்களத்திற்கு விண்ணப்பித்தனர். இதன் காரணமாகவே ஓர் ஆணைக்குழு பரிசீலனை செய்வதற்காக கல்லூரிக்கு ஆயுர்வேத ஆணையாளரால் அனுப்பப்பட்டது. கல்லூரியில் சில குறைபாடுகள் இருக்கின்றனவென்றும், அவை நிவிர்த்தி செய்யப்பட்டாலன்றி' கல்லூரி அங்கீகாரத்திற்கு அருகதை அற்றதென்றும் குழுவினர் அறிக்கை சமர்ப்பித்தனர். இதன் பின்பு, இயக்குநர் சபையிலுள்ள சில அங்கத்தவர்கள் ஆயுர்வேத ஆணையாளரை நேரில் கண்டு குறைபாடுகளைக் கூறி, ஏதும் சலுகைகள் செய்யவேண்டுமென்றும், கல்லூரி தொடர்ந்து நடக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டனர்' சபையின் வேண்டு கோளுக்கிணங்கி, ஆண்டு தோறும், இறுதி வருடப் பரீட்சையை ஆயுர்வேத திணைக்களமே நடாத்துவதென்றும் இதில் சித்தியடைந்த பட்டதாரிகளை, ஆயுர்வேத வைத்திய சபை, வாய் முறைப்பரீட்சை செய்து, பதிவு செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இத் தீர்மானத்தின் படியே 1967-ம் ஆண்டு தொடக்கம், ஆயுர்வேத திணைக்களமே இறுதிப் பரீட்சையை நடாத்தியும், வைத்திய சபையே பட்டதாரிகளைப் பதிவு செய்தும் வருகின்றது. கொழும்பு அரசினர் ஆயுர் வேதக் கல்லூரியின் பாடத்திட்டங்களுக்கு அமைய இதையும் கூடிய விரையில் தரத்தை உயர்த்தவேண்டுமென்று ஆணையாளர் கேட்டுக்கொண்டபடியே செய்துள்ளோம். இறுதி வருட மாணவர்களை யாழ் மாநகர சபை நடத்தும் இலவச ஆயுர்வேதசித்த வைத்திய சாலைக்கும் அனுப்பி நோயாளை நிதானித்தும் சிகிச்சை முறைகளை அப்பியாசப்படுத்தவும் வசதியளிக்கின்றோம். இது இக்கல்லூரியின் குறையை நிவிர்த்தி செய்வதற்காகவேயாம்.

எமது நாட்டிலே ஆயுர்வேத சித்த வைத்தியத்தின் அபிவிருத்திக்காக பெருந்தொண்டாற்றி வருகின்ற கல்லூரிக்கு 1975-ம் ஆண்டிலேயே பொன் விழா மிகச் சிறப்பாக நடத்தியிருக்க வேண்டும். ஆனால் அக்காலத்தில் துர்அதிஷ்டவசமாக இயக்குநர் சபையில் பிளவு ஏற்பட்டது. கல்லூரியும் இரு கூறுகளாகப் பிரிந்து இயங்கியது. மாணவர்களின் படிப்புப் பெரிதும் பாதிக்கப்பட்டது. நிர்வாகம் முற்றாக மாற்றியமைக்கப்பட்டது. கல்லூரியின் விஷயங்கள் யாவும் நீதிமன்றம் வரையிலுமே சென்று விட்டது கல்லூரியின் சரித்திரத்தில் மிகக் கஷ்டகாலம் கழிந்த பின், தற்போது புதிய நிர்வாகம் பொறுப்பேற்றுள்ளது. இயங்காமலிருந்த வைத்திய சாலையும், ஔடதசாலையும் தற்போது செவ்வனே இயங்கி வருகின்றன. இந்த நிர்வாகமே இவ்வாண்டிலாகிலும், பொன் விழாவை மிகவும் விமரிசையாகக் கொண்டாட வேண்டுமென்று பேரவாக் கொண்டுள்ளது. இவ் விழாவை வெற்றிகரமாகக் கொண்டாடி முடிப்பதற்கு கல்லூரி விரிவுரையாளர்களும், மாணவ மாணவிகளும், பட்டதாரிகளும், வைத்திய அபிமானிகளும், பொது மக்களும் தங்களாலியன்ற ஒத்துழைப்பைக் கொடுப்பார்களென்று பெரிதும் நம்புகின்றேன்.


அ. வி. இராசரத்தினம் D.A.M. (Cey.)
விரிவுரையாளர்
லங்கா சித்த ஆயுர்வேத வைத்திய கல்லூரி.



Dr. K. S. PARAMSOTHYNATHAR

"ADMINISTRATIVE OFFICER"

COLLEGE TREASURER, BOARD OF DIRECTOR,
ORGANIZER & TREASURER GOLDEN JUELEE



**Dr. R. S. Innasithamby**

Vice Principal,
Secy. N. C. B. I. M.

கணபதியே நம

## சளைத்திடா துழைக்க வாரீர்!

ஆங்கில வைத்தியத்தில் ஆர்வமுற் றமிழ்தமான
பாங்குடைச் சித்த ஆயுள் வேதவைத் தியம் பயிலா
தேங்கிடும் வகையிகழ்ந்தே ஏற்றமுற் றோர்கள் இன்னல்
தாங்கிட மருத்துவத்தின் மாண்பது தரணி காண.
அகத்திய மாமுனிதன் அகத்திடை வாழ்ந்த ஆற்றல்
ஜெகத்திடை பரவ ஓதும் வைத்தியக் கலைகள் விஞ்ச
அகத்தியனார்க்குச் செந்தேன் தமிழ்முதூட்டுமாறு
முகமுடை முருகன் நாண மேதினி கண்டுவக்க.
ஈழ நாடதனில் இன்முத் தாயொளிர் யாழ் நகரில்
வாழையடி வாழையாக வளர்ந்திட வேண்டுமென்றே
தாழ்விலா எண்ணங்கொண்டு, தன்னறிவாலுயர்ந்து
காழ்ப்பொடு பிறர்க்குக் கல்வி பகர்ந்திடாக் கறையுளத்தோர்
பொன்றி விட்டார்கள் என்று போற்றிடும் வகையி லீண்டு
அன்பினோ டறிவு மோங்க வைத்தியக் கலைக் கூடத்தை
இன்னல்கள் பலவு மேற்று இடைவிடா துழைப்பினோடு
மன்னிய உலகில் வாழ வைத்த நல் வுள்ளலாகும்.
அறிவுடை நம்பி பஸ்தியாம்பிள்ளை அகல் விளக்கு
உறுதியோ டமைத்த கோயில் உலகெல்லாம் நிறையும் வண்ணம்
வறியதோர் ஆற்றல் போக்கி நிர்வாகத் திறனுயர
அறிவுடை அவைய மொன்று அமைத்தனர் துணை பெறற்கே
மங்கிடாப் புகழுறுமில் வைத்தியக் கல்லூரிக்குப்
பங்கமில் தலைமை யேற்றுப் புதியதோர் அமைப்புக்காண
அங்குள அறிஞர் பதினைந் தாகிடும் அவையந் தன்னால்
துங்கமார் நிர்வாகத்தைத் தூயதாய்த் துலங்கச் செய்தார்,
இயக்குநர் அவையில் இனிதாயமர்ந்து
மயக்குறு நிர்வாகத்தினில் மாற்றம்
கண்டு பல் சாதனை புரிந்த காவலர்
நாட்டவைத் தலைவர் சட்ட அறிஞர்
சேர் வைத்திங்கம் துரைச்சாமியொடு
மேலவை உறுப்பினர் நடேசபிள்ளை
முது தமிழ் முதலியார் முத்துத் தம்பி
சித்த வைத்தியர் இன்னுசித்தம்பி
பாட்டாளி வர்க்கம் பயன்பெற உழைத்த
தேட்டத்துடனே தென்னிசைப் போந்த
தோழர் விசுவநாதன் துகளறு
இன்சொல் வேந்தன் இனிய பண்பாளன்
வினோதன் இன்னோர் வியத்தகு பணியில்
திண்ணிய கல்விக்கூடமாய்த் திகழ்ந்து
கண்ணியம் தண்ணொளி கருதிடு பொறையும்

நண்ணிய மாணுக்கர் தம் நலமும்
நன்றே பெற்ற நல்லொளி விளக்காய்
அகவிருள் சாடி அறிவொளி கூட
ஆற்றும் பணிகளை அகிலம் அளவிடா
தேற்றப் புரிந்து பல்லாண்டு வாழ்க.
லங்கா சித்த ஆயுள் வேத
வைத்தியக் கல்லூரிக்கென வாழ்வை
முழுதாய்த் தந்த முழுமதி யொப்ப
தண்ணொளி புரந்த தகவுடைக் குரவர்
அதிபர் பணியை அணிசெய் தோடும்
நதியென அறிவை நாற்றிசைப் பரப்பிய
நல் வித்தகர்கள் பஸ்தியாம் பிள்ளை
தொல்லருங் கீர்த்தி சோதியாம்சாமி
ஐயங் காரொடு அறிவுச் செல்வர்
சீனிவாச சாஸ்திரி எழிலார்
நாகலிங்கம் ராசையாவும்
ராஜரத்தினம் ஜெகோரத்தினம்
இன்னோர் பணியால் ஈட்டிய சிறப்பை
முரசறைந் திலங்குமெம் முது சொத்தான
வைத்தியக் கலைக்கூடம் பல ஆண்டு
நித்தியம் பணிசெய்து நீடு வாழ்க.
பேதலித்த உள்ளத்தோடு பெருமையைச் சிறுமையாக்கி
காதலித்த பெண்ணணங்கு காண்கின்ற சுகம் நயந்து
காதகம் செய்யுங் கோரக் கொலைஞர்தம் கொடுவாளாக
மேதகு செயல் புரிந்த சாயலிற் கரந்து வாழ்ந்து
கல்லூரி வாழ்வு தாழக் கயமைகள் புரிந்த நீசர்
பல்லிளித் தடிமையேற்ற பதடிகள் கொட்டம் சாய்த்து
புல்லறிவாளர் நீர்மை புவியது பரிகசிக்க
நல்லறிவாளர் போற்ற நானிலம் ஓங்க நாடி
அல்லலுற் றுயுள்வேத வைத்தியக் கல்லூரிக்கே
தொல்லைகள் தந்தேதோர் தாமே தோல்வியை ஒப்புக்கொள்ள
வல்லமை யூட்டி யேற்ற பணியினுக் குயிரையீந்து
நல்லதோர் நிலையை இந்தக் கலையகம் காண நாடும்
உழைத்திடும் உயர் பண்பாளன் பரஞ்சோதி நாதரேற்ற
விழைவுறு பணியின் ஆக்கம் விரிசுடராகி விண்ணின்
மழைதரு பயனை யொப்ப மன்பதை நலன் உவக்க
சழைத்திடாதுழைக்க வாரீர்! தயையுறும் அன்பு தாரீர்!
காசினிபுவக்கு மிந்தக் கலையகம் ஏற்றம் காண
நேசமுற்றரிய சேவை யாற்றிடும் நல்லுளத்தோர்
பாசமாம் பயிர்வளர்த்துப் பண்பது காத்து நாளும்
வீசிடும் தென்றலாக மென்மையின் உணர்வு பெற்று
பொங்கு மிடர் களைந்து பல்லாண்டு வாழவைக்கும்
துங்கக் கரிமுகன் தாள்.

க. சி. சிவசுப்பிரமணியம்
தென் புலோலி.

WITH BEST COMPLIMENTS FROM

## RADIO MANUEL

STANLEY RD JAFFNA

---

சகல மோட்டார் உதிரிப்பாகங்களுக்கும்

## V. M. K. MOTORS MART

STANLEY RD - JAFFNA

சுத்தமான சுவையான சிற்றுண்டி வகைகளுக்கும்

மதிய போசனத்திற்கும்



# BHARATH CAFE

64, PT. PEDRO RD. JAFFNA

சகல சுவை மிக்க பானங்கள்


சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக் கொள்ள

*தரம் மிக்க ஸ்தாபனம்*

*

# ARASCO INDUSTRIAL EXPORTS Ltd.

KANDY RD. - JAFFNA.



DIRECTORS
NORTH CEYLON BOARD OF
INDIGENOUS MEDICINE



2ND YEAR STUDENTS
1980

# என்றென்றும் அழியாது எங்கள் வைத்தியம்

நடராசா சிவசுப்பிரமணியம்
இறுதி வருடம்

அன்றொரு நாளிலே முனிவரும் மற்றோரும்
ஆராய்ந்து எழுதினர் ஏட்டினிலே
மன்னரும் மற்றோரும் போற்றிடவே அன்று
வளர்ந்தது எங்கள் வைத்தியமே

அகத்திய மாமுனி செய்திட்ட வலிமையால்
அகில நாடெங்கும் பரவியதாம்
செகத்தினில் மூலிகை சிறந்ததோர் மருந்தென்று
செயலினில் காட்டி வந்தனராம்

விஞ்ஞானம் வளர்ந்திட்ட வேளையிலே
எங்கள் மூலிகையை அறிந்த மேல்நாட்டார்
பென்சிலீன் சேபாசில் பியினேன் போன்ற
ஆங்கில மருந்துகள் செய்தனராம்

அன்றைய நாள்தொட்டு இன்றைய நாள்வரை
என்றுமே மக்கள் இனிதுடனே
இன்புற்று அவர்களும் நூறு வருடங்கள்
நோய்நொடி யின்றி வாழ்ந்தனராம்

என்றுமே நாங்கள் சுகத்துடன் வாழ்ந்திட
எண்ணியே நாடி மூன்றதனை
வாத பித்த கபமென அவர்களும்
வகுத்தே விட்டனர் ஏட்டினிலே.

ஊசி மருந்துகள் போடாமல் நாம்
உடலினை வெட்டிக் கிழிக்காமல்
லேகியம் பஸ்பம் செந்தூரம் கொடுத்தே
செகத்தினில் நோயை நாம் அகற்றிடுவோம்

கிரந்தி முதற்கொண்டு இழுப்பு ரோகம்வரை
சகல சிகிச்சையும் அழித்திடுவோம்
நம் ஏட்டினில் உள்ளதை இன்புறக் கற்று
இனிய வைத்தியம் செய்திடுவோம்

எங்கள் வைத்தியம் என்றென்றும் என்றென்றும்
எழில்பெற்றுத் தானது வாழுமையா
மாந்தர் உலகினில் வாழ்ந்திடும் மட்டிலும்
எங்கள் வைத்தியம் வளர்ந்திடுமே.

EVELYN RUTNAM INSTITUTE JAFFNA
218
REFERENCE LIBRARY

# விதிதான் இதுவோ

வைத்தியக்கலாநிதி மூதூர் அன்ரனி. D. A. M. (CEY)
வ. இ. சு. வை. சபை உறுப்பினர்

யாழோ டிசையும் யதார்த்த நூல்வகை
மேலா டூருற மொய்த்த கன்ரவழி
மூத்து வைரம் முறுவ லளித்துநல்
நத்து ஊர்கடல் நன்செய் நிலமதும்
புன்செய் யழகுகொள் புத்தூ ரதனில்
இன்சொல் லினிது ஈன்று வழங்கிடும்
யாழ்மென் கருவிகள் வாழ்பொன் பூமி
பாழ்பொய் யொன்றும் பதுங்கி வாழ்வுறு
நீள்கொண் டழகு நிறைந்த வீதிகள்
மூழ்கி யுயர்வுறு முடிசேர் மனைபல
கொண்ட திருநகர் குபேர நிறையிடம்
அண்டி யழகு யாழ்ப்பாண மாங்கே
குடிக்கெ லாம்புகழ் கொடுக்கும் நற்பதி
படித்த குடியினர் பரவு மழகுநற்
தூய்மை படர்ந்திடத் துரிதமாய் நீண்ட
தீமை யகற்றிடுந் திருநெல் வேலியில்
சைவ பரம்பரை சங்கத் தமிழ்மணம்
மெய்யி லுறைநல சுந்தரம் பிள்ளை
அன்னவர் மனைவி சின்னம்மாள் வயிற்றில்
சொன்ன இலக்கணம் சொந்த மாகிநல்
லறங்கள் ஓங்கி அன்பு பெருகிட
சிறந்த சிற்பி செதுக்கிய உருவில்
எங்கள் குலக்கொடி இறையென வந்தோர்
மங்கா விளக்கு மதியினைப் போன்றோர்
ஆழ்சே ரறிவு அமைந்த குருசில்
வாழ்வி லொளிதர வந்துற் றமர்ந்தவர்
இளகிய மனத்தவர் இராசை யாவெனும்
அழகிய நாமம் அமைந்த ஒளியாம்
கன்ன லுளமும் கசிந்த நோக்கும்
உன்னிப் பலவழி உணருஞ் சால்பும்
பொய்யுங் களவும் பொறாமை, சிறுமைதம்
மெய்யி லுணரா மேன்மை யுள்ளவர்.
தந்தை செல்வழி சாத்திரங் கற்றுத்தம்
சொந்தப் பணியெனத் திகழ்ந்த வைத்தியம்
கற்றுத் தெளிந்தும் களையற மிளிர்ந்தும்
மூற்று மறிவியல் முதுமைகொள் எழகு
தமிழில் வார்வமும சிறந்து விளங்கிட

தமிழறி முனிவர் வித்துவான் என்ற
அருந்தகைப் பட்டமும் அளித்துக் களித்து
பெருந்தகை தமக்குப் பெருமதிப் பீன்றனர்
யாழநக ரத்தே யமுதெனப் போந்து
தாழ்வினை யகற்றித் தவநெறி யீந்து
வைத்தியக் கலைபல வளரும் பணியில்
கைத்திறன் காட்டக் கல்லூரி அதிபராய்
வாழ்ந்து பணிபல வளம்பெற வீந்து
வீழ்ந்த போதும் வீரம் நிலையுற
ஆழ்ந்த அறிவில் அலைகடல் நிகர்த்தார்
ஈழந் தந்த இளந்தமிழ் செல்வம்
நாளொடு நாளாய் நற்பணி யீந்து
வாழ்வைப் பணியில் வைத்திட் டொளியாய்
ஏழ்மையைப் போக்கி இருந்திட்ட குன்றம்
காலன் வாயில் பட்ட ததனால்
கோலம் மாறிக் கொண்டது ஈழம்
நாளும் போதும் நனிகொள் துயரம்
ஏழமைப் பட்ட எம்மினை வாட்ட
அல்லற் பட்டோம் அறிதுயி லின்றி
தொல்லை மிகவாய்த் தொடர்ந்த ததனால்
குன்றம் பிருந்த செல்வம் போனதாய்
மன்றத் திருந்த மாளிகை சாய்ந்ததாய்
போனது எங்கள் பொறுமையின் சின்னம்
ஆனது காலன் பட்ட ததனால்
ஐயோ இனிநாம் செய்வது என்னே?
பொய்யாம் இந்த மானிடப் பிறவி
கற்பக தருவைப் பறித்திட்ட தேனோ
உற்றார் எம்மை உறுகொள் துயரம்
நட்டாற் றதனில் நனிகொள வைத்து
விட்டாய் இறையே விதிதான் இதுவோ.




# சித்தர்களின் சிறப்பும் தமிழ் மருத்துவமும்

தலைவர் சித்த வைத்தியர் சங்கம்
மதுரை

அனைத்துலகிலும் முதல் முதலில் தோன்றிய நிலப்பரப்பு இதுவேயென அறிஞர் குழாத்தினரால் அட்டியின்றி ஒப்புக்கொள்ளப்பட்டதும், பல்வேறு கலைகளையும் தோற்றுவித்துப் பண்டையப்புகழ் பரப்பிவருவதுமான தெள்ளுதமிழ் நாட்டில் தொன்றுதொட்டுப் பரவித் தழைத்தோங்க - எத்தனையோ இடர்ப்பாடுகளிலும் எதிர்நீச்சலடித்து இன்று ஏற்றமுடன் நின்றுலாவி வருவது எமது இணையில்லாத சித்த மருத்துவம் ஒன்றேயெனில் மிகையாகாது!

"அறுகென வேரூன்றி ஆலெனத்தழைத்து" எனக்கூறப்படும், மேலான சொற்றொடரின் மேன்மைக்கோர் அணிகலனுகத்திகழும் மூதண்டம் எனச்சிறப்புப் பெறும் முதல் மூலிகையாம் அறுகம் புல்லையே முதன்மையாகக்கொண்டு தொடங்கப் பெற்ற தமிழ்மருத்துவ முறை, முதன்முதலாகக இறையனார் என்ற மாபெரும் யோக ஞானச் சித்தரால் தோற்றுவிக்கப் பட்டதென்பது பண்டைய வரலாறு ஆகும். இயற்கையின் ஏற்றமிகு வடிவமாய்த் திகழ்ந்த இறையனாரின் கருணைமிகு வாய்மொழியின் மூலம் கன்னித்தமிழ்ச் சித்தர்களுக்குத் தெரிந்து, அவர்தம் வழியாக அகிலத்தோருக்குக் கிட்டிய அருந்தமிழ் மருத்துவக்கலையின் அரியநற் பயன்களுக்கோர் அளவேயில்லை!

பொய்ப்பொருளுக்கு மெய்ப்பொருள் கண்டுணர்ந்த சித்தர்கணங்களால் செப்புவிக்கப் பெற்றமையால், அவர்தம் பெயருடனேயே அழைக்கப்பெற்று சிறப்புபெற்ற அருந்தமிழ் மருத்துவமுறைகள், பிறநாட்டு அறிஞர் பெருமக்களாலும் கவர்ந்து கொள்ளும் அளவிற்கு காந்தக்கவர்ச்சி கொண்டவையாகவே திகழுவதாகும். எனினும், சித்த மருத்துவம் கவர்ச்சித்தன்மையை மட்டிலும் உள்ளுறையாகக் கொண்டதல்ல. மாறுக தொன்மையான ஆற்றல்மிக்க அனுபவம்நிறைந்த ஒன்று போலல்லாத பல்வேறுபட்ட தலைசிறந்த மருந்துகளையும், அவற்றின் செய்முறைகளையும், தத்துவரீதியாக வரையறுக்கப் பெற்ற தெளிவான விளக்கநூற்களையும் இன்னோரன்ன பிறவற்றையும் தன்னுடைய

மையாகக்கொண்டு தன்னிகரற்றுத் திகழ்வதாகும். இம்மருத்துவக்கலையின் சிறப்பிற்கு வித்தூட்டிய சித்தர் பெருமான்களின் சிறப்பினைக் கண்டு தெளிதல் மிகவும் அவசிய மான தொன்றாகும்!

## சித்தர்களின் சிறப்பு:-

பொதுவாக, சிறப்பு என்பது தான் புரியும் செயலாலன்றி பிறவற்றால் வருவ தில்லை. அங்ஙனமே சித்தர் பெருமக்களும் தாம்செய்த செயல்முறைகளினாலும் புரிந்த சாதனைகளினாலும், மேலான சிறப்புப்பெற்று விளங்கினர். எடுத்துக்காட்டாக ஒன்றி ரண்டைக் கூறலாம். அவை

திருமூலர் எனும் சிவயோகச்சித்தர், காயமழியாத யோகநிலையில் மூவாயிரம் ஆண்டுகள் அமர்ந்து, மூவாயிரம் பாடல்களை பார்த்து செயற்கரிய செயலைப் புரிந்த மையால் சிறப்புப் பெற்றார்.

போகர் எனும் மாமுனி இரசத்தை மணியாக்கி உயிரூட்டிப் பெற்ற சித்தர் ககனக் குளிகையின் துணைகொண்டு, அண்டவெளியில் பயணம் செய்தும் அகிலம் முற் றும் சுற்றித்திரிந்தும் பல நீர்மூழ்கிக்கப்பல்களைக் கண்டறிந்தும் நீரின் மேல்நிலையாக நடந்தும் செயற்கரிய செயலாற்றியமையால் சிறப்பினைப் பெற்றுத் திகழ்ந்தார்.

தேரர் எனும் தேர்த்தொரு சித்தர் ஒரு நோயாளனின் மண்டையோட்டைத் திறந்து, உள்ளிருந்து நோய்செய்த தேரையினை வெளியேற்றி பிணியாளியின் துயர் நீக்கிக் குணப்படுத்தி நலமூட்டிய திறம்மிக்க செயலினால் தேரையர் என்ற பெயருடன் சிறப்புகளை அடைந்தார்.

இங்ஙனம், 'கூடுவிட்டுக் கூடுபாயும்' வித்தையில் தேர்ந்தமையினால், ஒரு காகத்தின் உடலினுட்புகுந்து விண்வெளியில் பறந்துதிரிந்த காகபுசுண்டர் கொடிய நற்சரவுகளுடனேயே சதா பழகித்திரிந்த பாம்பாட்டிச் சித்தர் அனைத்திற்கும் மேலாக அலைகடலையே தம் அங்கைக்குள் அடங்கியவராம் அகத்தீசன் எக்கூறிக்கொண்டே செல் லுமளவில் சித்தர்கள் யாவருமே சாதனைகளிற் சிறந்திலங்கும் சான்றோரேயாவர்!

சித்தர்கள் தத்தமது சிந்துக்களில் மட்டுமின்றி மாந்தரனைவருமே நரை, திரை, மூப்பு, பிணி, பயம், சாக்காடு முதலிய உலகவியல்புகளை வென்று காயசித்தி பெற்ற சகாநிலையடையும் விதிகள் யாவற்றையும் விளம்பியுள்ள காரணத்தினாலும் யோக, ஞானவழி நின்று இன்னபிற எண்ணரிய கலைகளையும் இயம்பியுள்ளமையினா லும் பெருமைதரும் அருஞ்செயல்புரியும் ஆற்றலுடன் திகழ்ந்தமையினாலும் பெரும் சிறப்புப் பெற்றுத் திகழ்பவராயினர்!

இத்தகைய சித்தர் பெருமக்கள் மிகுந்த தமிழ்ப்புலமையுடனும் ஞானநூற் களில் தேர்ச்சியுடனும் உடல் மாற்றும் மனதின் தத்துவங்களை நன்குணர்ந்தும் மணி, மந்திர, மாமருந்துகளின் பயன்கண்டு வைத்தியத்திலும், வகரத்திலும் தேர்ச்சிகண்ட வராயும் சகலவித சித்திகளையும் கைவரப்பெற்று பஞ்சபூதங்களையும் அடக்கியாளுப வராயும் சுருங்கக்கூறின் இறைத் தன்மையுடன் விளங்கும் தேவகணங்களுக்கு பேறு பெற்றவராயும் திகழ்ந்தனர்.

தனது உடலை உருவமாகவும், அருவமாகவும், அருவுருவமாகவும் மாற்றி; அறுபத்து நான்கு கலைக்கியானங்களிலும் தேர்ச்சிபெற்று அரியசெயல்களை நொடியில் செய்து காட்டும் திறன் பெற்றோராக விளங்கிய சித்தர்கள் கிட்டுதற்கரிய பல சாகா

மூலிகைகளின் துணைகொண்டு, மருத்துவத்துறையிலும் கணக்கற்ற சாதனைகளைப்புரிந்து அவற்றின் பயன்களைத் தன்னைப்போன்றே பிறரும் பெற்றுப் பயனடை வேண்டுமென்ற அவாவினால் அனைத்தையுமே ஒளிவுமறைவின்றி அகிலத்தோருக்கு அருளிச்சொல்லியவர்களாகும்!

மரணமிலாப் பெருவாழ்வைப்பெற மனமுவந்து பாடுபட்டு உழைத்துப் பயனும் பெற்றோரே சித்தராகும். எனவேதான் வள்ளுவனின் வாக்குப்படி அவர்களுக்கு ''கூற்றங் குதித்தலும் கைகூடின'' ஆரெழுத்தாதி அறிவுறுத்தியதோ, ''என்றும் சாகரர் சிவசித்தர்'' என்பதாகும். ''மனிததேகம் சித்திபெறும் காலை சிவனுனது முக்திநிலையை அடையும். அந்நெறி'' மிகவும் நல்ல நெறி என்பது தாயுமானவர் கூற்றாகும். ''செய்த பிழையறியேன் சேவடியைக்கைதொழுதேன் உய்யும் வகையில் உயிர்ப்பறியேன்'' என்பது மணிவாசகரின் திருவாசகமாகும். ''நரைமரண மூப்பறியாநல்லவுடம்பினரே. நற்குலத்தாரென வறிமின்'' என இயம்புவது இராமலிங்கனாரின் திருவருட்பாவாகும். இங்ஙனமே சித்தியடைந்து முக்திபெற்றும் 'நிலைபற்றி செப்பியுள்ளவர்கள் பலராகும்.

எனவே, சித்த பெருமான்கள் ஆற்றியுள்ளதாகக் கூறப்படும் அருஞ்செயல் யாவும் மிகையல்ல - அவையாவும் முக்காலும் உண்மைதான் என முழுமையாக நம்புவதற்கு நமது பண்டைய இலக்கியங்களிலும் கூட ஏராளமான சான்றுகளுள்ளதாலும்; பல்லாயிரக்கணக்கான சித்தர் நூற்களில் செப்பியுள்ளமையினாலும் அவர்தம் சிறப்புக்களை மறுத்துரைப்பதற்கு எவ்வித முகாந்திரமுமில்லை என உணரலாம். சுருங்கக்கூறின், அட்டமா சித்திகளையும் பெற்று, சாகாநிலையடைந்து, அன்றும் இன்றும் என்றுமே மறுக்கவியலாத கருத்துக்கருவூலங்களை கருணையுடன் வாரி வழங்கியுள்ள முக்திபெற்ற சித்தர் பெருமக்களின் சிறப்புக்களை புரிந்து, அவர்தம் வழி நடந்து ஆண்டவன் அருள்பெற்று அகமகிழ, முறன்பாடான வாழ்க்கைத் தத்துவங்களுள் உழன்று செத்தொழியும் மனிதக்கூட்டத்தால் இயலாதென்பதுடன் - சித்தர் தத்துவங்களை, சூக்குப்பொருட்களை நன்குணர்ந்து செயல்பட்டால் மனிதனும் தேவனாகலாம் என்ற உண்மையை எவராலும் மறுக்கவியலாது என்பது திண்ணம்.

## தமிழ் மருத்துவம்

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' எனும் பரந்த மனப்பான்மையைக் கொண்டதான தமிழ் மண்ணில் தோன்றிய தமிழ் (சித்தர்) மருத்துவமும் பார் முழுவதும் பயன்படும் வண்ணமே பாங்குடன் பயிற்றுவிக்கப் பெற்றுள்ளதால், உலகில் இன்று நின்றுலவும் மருத்துவ முறைகள் அனைத்திலுமே சிறந்ததான, முடிவானதான, மாற்றமுடியாததான, அட்டியின்றி ஏற்றுக்கொள்ளத்தக்கதான, அரும்பெரும் முறைகளடங்கியதான, அனைவருக்குமே நலமூட்டுவதான மேலான சிறப்புகளுடனேயே இன்றும் திகழ்ந்துவரும் முறையாகும் என்பது அறிவுடையோரால் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாகும்!

இம் மருத்துவமுறை தமிழகத்தில் தோன்றியதால் தமிழ் மருத்நுவம் எனவும் சித்தர்களால் செப்பியுள்ளமையால் சித்த(ர்) மருத்துவம் எனவும் - சித்தா, ஆயுர்வேதம், யூனானி ஆகிய நம்நாட்டு மருத்துவ முறைகளுள் ஒன்றெனத்திகழ்வதால் நாட்டு மருத்துவம் எனவும் - மூலிகையினங்களை அதிகமாக உள்ளடக்கியுள்ளதால் பச்சிலை மருத்துவம் எனவும் பலவாறு அழைக்கப்படுகிறது. உலகின் முதல் நாட்டில், முதலாவது மொழியில், முதன்மையான சித்தர்களால் வகுக்கப்பெற்ற தமிழ்மருத்துவம் மட்டுமே பிற்கால, பிறநாட்டு, பிறமொழி மருத்துவமுறைகளுக்கெல்லாம் முன்னோடியாகும் என்பதில் ஐயமில்லை!

பஞ்சபூதப் பிரிவுகளின் அடிப்படையிலும் - தொண்ணூற்றாறு தத்துவங்களையும் ஏழுவித உடற்கட்டுகளையும், பதினான்குவகை விரைவுகளையும், மலம், நீர், வியர்வை போன்ற கழிவுகளையும், மனம் சிந்தனை முதலிய இயக்கங்களையும் உள்ளடக்கியதான விந்தைமிகு மனித உடலின் உடல்கூறு, உடலியல் முதலிய தத்துவங்களனைத்தையும் நன்குணர்ந்தும் கூறப்பட்டதே தமிழ் மருத்துவமாகும். மேலும், இது - காலம், பருவம், நாடு, மக்களின் வாழ்வுமுறை, ஒழுக்கநெறி, உணவுவகை போன்ற சூழலுக்கேற்பவும் - எங்கும், எப்பொழுதும், இலகுவில் கிட்டும் எளிய பொருட்களைக் கொண்டே செயல்படுமளவிலும் கூறப்பட்டதாகும்.

இதோடன்றி, மருந்தை மருந்தாக மட்டுமின்றி உணவாகவும் உட்கொள்ளுமளவில் வகைப்படுத்தியும் - வந்தநோயை நீக்குவதன்றி, நோயே வராது தடுக்கும் முறைகளையும் வகுத்தளித்தும் - உடலுக்கும் மனதுக்கும் மட்டுமன்றி உயிருக்கும் நல்வழியைப் புகட்டியும் நலமூட்டுவது சித்த மருத்துவம் ஒன்றேயாகும். நோயாளிக்குமட்டுமின்றி அவன் பிணிதீர்க்கும் மருத்துவனுக்கும் கண்டிப்பான ஒழுக்க விதிகளைக் கூறியுள்ள சித்தமருத்துவம் மணி - மந்திரம் - மருந்து ஆகிய முப்பெரும் பிரிவுகளையும், மர்மம் அறுவை, மனோவசியம் போன்ற உட்பிரிவுகளையும் உள்ளடக்கியதாகும்.

தூல உடல் - சூக்கும உடல் - காரண உடல் என்ற மனித உடலின் மூவகைப் பிரிவுக்கும், வாதம் - பித்தம் - கபம் என்ற மூவகைக் குற்றக் கேடுகளினால் வரும் சகலவிதமான பிணிகளையும் வகுத்து, அப்பிணிகட்குரிய சிகிச்சை முறைகளையும் மனித மருத்துவம் - தேவ மருந்துவம் - இராக்ஷத மருத்துவம் என்ற மூவகைப்பிரிவினால் வகுத்து, காப்பு - நீக்கம் - நிறைப்பு ஆகிய மூவகைப் பயனையும் பெறுமளவில் ஏக மூலிகைப்பயன் - மரணப்பயன் - திராவகப்பயன் - செயநீர்ப்பயன் - முப்பூப்பயன் முதலிய அரிய முறைகளையும் தெளிவாக வகுத்துக் கூறியுள்ளது தமிழ்மருத்துவ முறையில் மட்டுமேயாகும்.

இங்ஙனமே, உலகின் சகலவிதமான அசையும் - அசையாப் பொருள் யாவற்றையும் தாவரம் - தாது - சீவ இனம் என்ற முப்பிரிவினுள் அடக்கி, அவற்றை புல்-பூண்டு - செடி - கொடி - மரம் - உலோகம் - பாடாணம் - உபரசம் - காரசாரம் - ஊர்வன - நடப்பன - பறப்பன - நீந்துவன எனும் பல்வகையாகப் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் பெயரிட்டும் அழைத்தவரும் சித்தரேதாகும். அதோடு நில்லாமல், நமது மருத்துவ முறைகளுக்குப் பயன்படுமளவில், உலகின் சகலவிதமான பொருட்களுக்குமுரிய அமைப்பு, வடிவம், தோற்றம், ஒரு பொருளின் சகல உறுப்புகளுக்குமுரிய நற்குணம், தீயபண்பு, செயல்படும் உறுப்பின் பயன், நச்சுத்தன்மைக்குரிய முறிவு, சுவை, வீரியம், பிரிவு, செயல்திறன், வகை, தனிக்குணம், பிறவற்றுடன் சேர்க்கைக்குணம், சுத்திமுறை, சத்துரு, மித்துரு, ஆண் பெண் சரக்குகளின் வேற்றுமைப் பயன் முதலிய சகல பொருட்பண்பு விளக்கங்களையும் தெளிவாகவும் - அவை கிட்டும் இடமும், காலமும், அவற்றை எடுத்துக் கையாளும் முறையும், இன்னபிற விபரங்களையும் கூறியுள்ளது சித்தமருத்துவ முறையின் சிறப்புகளில் முக்கியமானதாகும்.

சித்தர்களது கூற்றுப்படி, நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு வகையான பிணிகளின் பெயர், பிரிவு, முற்குறி, தீரும் குறி, தீராக்குறி, தனிக்குறி, தொந்தக்குறி முதலியவற்றையும் - விஷக்கடிகளினாலும், வர்மக் குற்றத்தினாலும் இடு மருந்துகளினாலும், நச்சுப்பொருட்களினாலும், கேடுற்ற மருந்துகளினாலும் விளையும் தீங்குகளையும் தெளிவாக விளக்குகுகூறியுள்ள தமிழ் மருத்துவமுறை, முப்பத்திரண்டு


அகமருந்து - முப்பத்திரண்டு புறமருந்து ஆக அறுபத்து நான்கு வகையான மருந்து செய்முறைகளையும் கூறி அவற்றால் நீங்கும் பிணிகளையும் செப்பியுள்ளது. மேலும், கூட்டுமருந்தினால் மட்டுமின்றி, ஏக மருந்தினாலும் பல பிணிகளை நீக்கலாமென்பதும், ஒரே மருந்தின் துணைகொண்டு, அனுபானங்களை மட்டும் மாற்றி மாற்றித் தருவதால் எண்ணற்ற பிணிகளையும் எளிதில் போக்கலாம் என்பதும் தமிழ் மருத்துவத்திற்குப் புகழ் சேர்ப்பதாகும்.

மருந்துக்களினால் மட்டுமின்றி, மணியினாலும் மந்திரத்தாலும் மண்டிப்பெருகும் மாபெரும் பிணிக்கூட்டத்தையும் மாளவைத்து, நோயாளியை மரணவாயிலினின்று மீளவைத்து மகிழ்வும், மனஅமைதியும், உடல்வலிமையையும் உண்டாக்கித் தருவது தமிழ் மருத்தவம் ஒன்றேயாகும். அதிகாலையில் எழுவது முதல், அந்தியில் அடைவதுவரை ஒவ்வொரு மனிதனும் மேற்கொள்ளவேண்டிய ஒழுக்கநெறியாவற்றையும் ஒன்றுவிடாமல் ஒழுங்குபட ஓதியுள்ளது சித்தமருத்துவத்தில் மட்டுமேயாகும். சுருங்கக்கூறின் சித்த மருத்துவமுறையில் செப்பியுள்ளபடி சீரான வழிநடப்போருக்கு, வந்தநோய் தீருவதோடன்றி நோயே வராதுதடுத்துக்கொள்ளும் ஆற்றலும் தானே வந்துசேரும் என்பது திண்ணம்!


நிற்க, சித்தர்களது சிறப்புக்களையும் தமிழ்மருத்துவத்தின் மேன்மையினையும் எத்தனை புகன்றாலும் ஏற்புடையதாகவே அமையுமென்னும் இயலுவனயாவும்கூற இங்கு இடம் காணாதாகவே இத்துடன் சுருக்குகின்றேன். முடிக்குமுன் மன்னர்களாலும் வள்ளல் பெருமக்களாலும் தொன்றுதொட்டு போற்றிக்காத்து வளர்க்கப்பெற்று வந்ததான சீர்மிகு சித்தமருத்துவமுறை இடைப்பட்ட ஆங்கிலேயரின் ஆட்சியின் போது ஏற்பட்ட அடக்குமுறையினாலும், அன்னவர்தம் போலிநாகரீக வெளிப்பூச்சுக்களினாலும், தான் கொணர்ந்த பொருள் விலையாக மேற்கொண்ட நரித்தந்திரங்களினாலும் இடைவிடாத துர்ப்பிரசாரங்களினாலும் சற்றே சீர்குலைந்து, வளர்ச்சிகுன்றி வாடிநிற்கும் நிலையினையும் நினைவூட்டுகின்றேன்.

சித்த மருத்துவமுறையின் நலிவுநிலைநீங்கி, மீண்டும் நனிசிறக்க வளர்ந்தோங்கி, நாட்டுமக்களின் வாட்டம் போக்குமளவில் நன்னிலைபெற வேண்டுமென்ற நற்கருத்துடன் தொண்டாற்றிவரும் நல்லமனம் படைத்த தமிழ் மருத்துவரனைவருக்கும் நன்றியினைக் கூறிக்கொள்வதுடன் அத்தகைய நல்லோர் அயர்வின்றிப் பணிபுரிந்து அளவிலா சாதனைப்புரிய நல்லாசியருளுமாறும் எல்லாம்வல்ல இறைவனை வணங்கி வேண்டுகின்றேன். வணக்கம்.


வாழ்க தமிழ்! வளர்க நற்கலை!! வெல்க சித்தம்!!!



STAFFS: Lanka Ayurvedic Medical College & Siddha Institute Jaffna.



*Dr. T. Tharumadurai D. A. M. Secy:- D. A. M Association*
*Pharmacy Incharge.*



*Mr. K T Polisingham*
*College Martial*



**Dr. A. S. Mahalingam**
D. A. M
President D.A.M. Assn.
Vice President G. J. C

லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி பொன்விழா

இனிதே நடைபெற எனது வாழ்த்துக்கள்

# Dr. N. PATHMANATHAN

D.A.M., R.I.M.P.

Chetty Street,

POINT - PEDRO.

பொன் விழா சிறப்புற எமது வாழ்த்துக்கள்

அரிசி ஆலை உதிரிப்பாகங்கள் இறக்குமதியாளர்கட்கு விற்பனைக்குண்டு.

# K. R. SIVALOGANATHAN & CO.

**6, Stanley Road,**

**JAFFNA.**

அன்பளிப்பு

# CHICK AND KINE

8. 10 STANLEY ROAD.
JAFFNA.

*With the best Compliments From*

# The Meikandan Press Ltd.

**JAFFNA.**

*FOR*

* CALENDERS
* PLASTIC DIRIES
* DOCUMENT CASES.
* FANCY PICTUR - ETC.

அன்பளிப்பு:

வைத்திய கலாநிதி. ஜி. ஜோர்ஜ் D. A. M.

சமாதான நீதவான்.

சுன்னாகம்.

கபிரியேல் வைத்தியசாலை,

சுன்னாகம்.

தொலைபேசி: 312



*With the Best Compliments From:*

# DR. F. R. BASTIAMPILLAI

**Lanka Ayurvedic Medical Hall**

VADDAKACHCHI.

லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக்கல்லூரி

பொன் விழாவுக்கு

எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்

## DR. R. PACKIANATHAN *D. A. M.*

*PONNIAH MEDICAL HALL*

THIRUNELVELY EAST

**JAFFNA.**

---

*With the best Compliments*


*From:*

# Brown & Co. Ltd.

**JAFFNA.**



1ST YEAR STUDENTS
1980



2ND YEAR STUDENTS
1980

# லங்கணம் பரம ஔஷதம்

ஆர். எஸ். இன்ருசித்தம்பி
கல்லூரி உப அதிபரும்
வட இலங்கை சுதேச வைத்தியசபை காரியதரிசியும்

உண்ணு இலக்கண சிகிச்சை. மிகப் புரதன சித்த வைத்திய முறையாகும் இப்பொழுது மீண்டும் அது ஒரு விஞ்ஞான அடிப்படை உத்தரவாதம் பெற்று ரூசிய நாட்டிலிருந்து இங்கு வந்துள்ளது என்று தான் இந்திய ஆயுள்வேத வைத்தியசங்கத்தின் அழைப்பை ஏற்று கல்விச் சுற்றுலா சென்றபோது பல இந்திய டாக்டர்கள் என்னிடம் கூறினர். உண்ணு விரதம் அல்லது இலக்கன சிகிச்சை பல நோய்களுக்கான ஓர் சிகிச்சை முறையாக நெடுங் காலத்திற்கு முன்னரே எகிப்து, இந்தியா, கிரீஸ் ஆகிய நாடுகளில் வழங்கி வந்தது. வரலாற்றிற்கு முந்தின புராதன காலத்திலே மக்கள் இந்த முறையைக் கடைப்பிடித்தனர் என்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. எம் வீட்டு வளர்ப்புப் பிராணிகளின் உடல்நலம் கெட்டால் அவை உடல் சீரடைவது வரை தாமகவே உணவருந்துவை நிறுத்தி விடுவதை நாம் அவதானிக்க முடியும்.

சித்த ஆயுள்வேத முறைப்படி உண்ணுவிரத சிகிச்சை பன்னெடுங் காலமாக பழக்கத்திலிருந்து வருகிறது. உடலிலிருந்து முதற் கண் நச்சுப்பொருள்களை அகற்றுவதற்கான ஒருமுறை, உண்ணு நோன்பு: அதைத் தொடர்ந்து, பின்னர் நோயைத் தீர்க்கப் பல்வேறு மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. உண்ணு நோன்பு, யோகப் பயிற்சிலும் ஒரு அம்சமாகும். பதினெட்டாம் நூற்ருண்டில், மாஸ்கோ பல்கலைக்கழகப் பேராசியர்களான பி. வெணியமஹேஷ். ஐ. ஸ்பாஸ்க்கி ஆகியோர் பல்வேறு வகையான நோய்களைத் தீர்ப்பதில், ''பட்டினி சிகிச்சையின்'' பலன்கள் குறித்துப் பல பரிசோதனைகள் நடத்தி வெற்றி பெற்றனர். வளர் சிதை மாற்றக் கோளாறுகள். குறிப்பாக, கொழுப்புப் பொருளின் வளர் சிதை மாற்றம். பல இரத்த ஓட்டநோய்கள், நுரையீரல் ஆஸ்த்மா, தோல் வியாதிகள் ஆகியவற்றைக் குணப்படுத்துவதில். கட்டுப்படுத்தப்பட்ட உண்ணுவிரத முறை அளிக்கும் பயன்கள் குறித்து, சோவியத் மருத்துவரான என் நார்பகோன் தனது ஆய்வுக் கட்டுரைகளில் விளக்கமாக எழுதியுள்ளார். முன் சிறுகுடல் வளைவு இரைப்பை ஆகியவற்றில் உள்ள புண்களை ஆற்றுவதில் அப்படிப்பட்ட உண்ணுவிரத சிகிச்சையின் வெற்றிகள் பற்றி, பேரவை உறுப்பினரான ஏ. பாருவேல் பரிசோதனைகள் நடத்தி வெற்றி கண்டுள்ளார்.

தற்போது இந்த முறை, பலசோவியத் வைத்தியக் கூடங்களிலும் கடைப்பிடிக்கப்படுகின்றது. தோல் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு இம் முறையில் பாட்ரிஸ்லுமும்பா பல்கலைக் கழக வைத்தியக் கூடம் வெற்றிகரமாகச் சிகிச்சை அளித்து வருகின்றது. மேலும் சிலவகை மனக்கோளாறுகளுக்கும் குறிப்பாக ஆரம்ப நிலையில் உள்ள மனோ நோயாளர்களுக்கும் இலக்கன சிகிச்சைமூலம் பரிகாரம் காணலாமென ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர். உ-ம். உடலில் எவ்வித நோயும் இல்லாத போதும் கூட தாங்கள் நோயுற்று இருப்பதாக அச்சமுறுவோர் தனிமையையிட்டு பீதி கொள்வோர் கூட்டமாக மக்களைக் கண்டு கூச்சமடைவோர் இருட்டு, தொற்று நோய், கூர்மையான பொருட்கள் முதலியவற்றை இட்டு தேவையின்றி அச்சம்கொள்வோர் ஆகியோருக்கும் இலக்கன சிகிச்சை ஓர்மாமருந்தாகும். எனினும் சிரான மருத்துவ மேற்பார்வையிலேயே, இந்த முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். இவ்வகை சிகிச்சை அளிக்கப்படும் நோயாளிகள் வைத்திய கூடத்தில் தனிமையான 'அறைகளில்' வைக்கப்படுகின்ற நோயாளிகள் அவர் தம் உறவினர்கள் ஆகியோரது ஒப்புதலின் பேரிலேயே, இம்முறை கடைப்பிடிக்கப்படுகின்றது. முதலில் நோயாளிகள் எல்லாவகையான பரிசோதனைகளுக்

உட்படுகின்றனர். உண்ணா விரத சிகிச்சையை மேற்கொள்ளுவதால் நோயாளிகளுக்கு எவ்வகையான பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என்பதை உறுதி செய்த பின்னரே இந்த சிகிச்சை முறை தொடங்கப் படுகின்றது. ஒவ்வொரு நோயாளிக்கும், எத்தனை நாட்கள் உண்ணாநோன்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது, அவரவரது நோய் உடல்நிலை, ஆகியவற்றைப் பொறுத்து நிர்ணயிக்கப்படுகின்றது. அந்தக் காலகட்டம் இருபது முதல் நாற்பது நாட்கள் வரை நீடிக்கலாம். உண்ணா விரதத்தை நோயாளிகள் கடைப்பிடிக்கும் பொழுது, அவர்களுக்கு எந்த மருந்தும் கொடுக்கப்படுவதில்லை.

லங்கண சிகிச்சை ஒரு மனிதனது நோயைத் தீர்க்க பயன்படுகிறது. இச் சிகிச்சை தொடங்கும் பொழுது நோயாளியின் குடல்பகுதி அனைத்தும் முதலில் கழுவிவிடப்பட்டு நோயாளிக்கு குடிப்பதற்கு நிறைய நீரும் காலை வேளைகளில் நோயாளியின் உடம்பு இதமாக பிடித்தும் விடப்படுகின்றது. சிகிச்சையை மேற் கொள்ளும் நோயாளிகள் பெரும்பாலான நேரத்தை காற்றோட்டமான வெளிகளி லேயே கழிக்கின்றனர். 3 - 5 தினங்களில் பசிஉணர்வு மறைந்து உணவின் வாசனையோ அல்லது உணவை பார்ப்பதோ அவர்களை பாதிப்பதில்லை. எனினும் உணவு குறித்த ஆசை எண்ணங்கள் மனதில் அசைபோடவே செய்யும். நோயாளி அந்தகைய எண் ணங்களில் இருந்து விடுபடாதிருந்தால் அவ்வெண்ணமே நோயாளியை மேலும் பாதிக்குமாகையால் இந்நிலையில் மருத்துவர்களும் உளவியல் சிகிச்சையாளரும் நோயாளிக்கு உதவுகின்றனர்.

ஆறுவது அல்லது ஏழாவது நாளில்தான் மிகக்கஷ்டமான அனுபவம் ஏற் படும் அப்பொழுதுதான் உடல் தனது உள்ளார்ந்துள்ள சக்தியை உணவாக பயன் படுத்த தொடங்குகின்றது. இந்நிலை குறுகிய கால அளவுக்கே நீடிக்கும். அதன் பின் னர் நோயாளிக்கு அவ்வளவு சிரமம் இருக்காது அவனது மன உணர்வும் பலமும் அதிகரிக்கும். அவனிடமிருந்த பிரதான நோய் குறையத் தொடங்கும். உடலின் சக்தி சேமிப்பு திரும்வரை இந்நிலை நீடிக்கும்.

30 அல்லது 35 தினங்களில் நோயாளி இந்த நிலையை அடைவார் இக்கால கட்டத்தில் நோயாளியின் நாக்கு சுத்தமடைந்து தோலும் ஒருவித இளஞ்சிகப்பு நிறத்தை அடைகின்றது. வாயில் உள்ள துர்நாற்றம் நீங்கி அவனுக்கு தாங்கமுடியா பசி உணர்வு மேலிடுகின்றது. இந்நிலையில்தான் உடல் அடுத்த முக்கியமான புனர மைப்புக்கு ஆயத்தமாகின்றது. இவ்வாறான உண்ணாவிரத சிகிச்சை மேற்கொண்ட நோயாளிக்கு பின்வரும் முறையில் உணவு கொடுக்கப்படுகின்றது. முதலில் நீர் கலந்த பழச்சாறு, படிப்படியாக நீர் சேர்காத தோடம்பழச்சாறும், அதன் பின்னர் சஞ்சி, தொடர்து மரக்கறி ரசம், (சூப்) இப்படியாக 30 அல்லது 40 நாளில் தான் வழக்க மான உணவு கொடுக்கப்படுகின்றது. இவ்விதமான விரதத்தை மேற்கொள்ளும் நாளில் நோயாளி மொத்த எடையில் சராசரி 15-20 சத வீத எடையை இழக்கின்றார்

இந்த முறையில் 5 உயிரியல் அம்சங்கள் உள்ளன. முதலாவது நரம்பு மண் டலத்திற்கும் மூளைக்கும் பூரண ஓய்வு கிடைக்கின்றது. இரண்டாவது உடலில் இருந்து நச்சுப்பொருட்கள் நீங்கி உடல் சுத்தம் செய்யப்படுகின்றது. மூன்றாவது புனரமைப்பு வேகமாக நடைபெறுகின்றது. நான்காவது திசுக்கள் தீவிரமாக தானாகவே புதுப்பிக் கப்படுகின்றது. ஐந்தாவதாக உடலின் எல்லா மண்டலங்களும் குறிப்பாக நாளமில் சுரப்பு மண்டலமும் ஒருவித தகைவு நிலைக்கு உட்படுத்தப்படுகின்றது. இவற்றைப் போன்றே மூளையும் இச்சிகிச்சை காலத்தில் அதில் உள்ள நச்சுத்தன்மையை இழந்து புத்துயிர் பெறுகின்றது. காரணம் மூளையின் சக்தியை பெருமளவு பயன்படுத்துவது ஜீரண மண்டலமேயாதலால் உணவின்றி இருக்கும்போது அது நல்ல ஓய்வுபெறுவது இயற்கையே. இதுதான் நான் முன்னர் குறிப்பிட்ட உளவியல் கோளாறுகள் சீரடை வதன் அடிப்படையாகும்.

# சிறப்புற வேண்டும் சித்த வைத்தியம்!

கே. நடராஜா
(1ம் வருடம்)

எமது நாட்டிலே சுதேச வைத்திய முறைகளான சித்த வைத்தியம் ஆயுர்வேதவைத்தியம், யுனானிவைத்தியம் என்பன தொன்மைமிக்கன இவற்றுள் சித்த வைத்தியம் தமிழருடைய பாரம்பரிய முறை என்று கூறுவர். இன்றைய காலகட்டத்தில் சித்தவைத்தியம் என்பது ஒன்றில்லை என்றும் தனித்தன்மை பற்றிய சித்தர் கலை அடிப்படையில் ஆயுர் வேதத்தையே கொண்ட கட்டமைப்பே என்று அறிஞர் சிலர் கூறுகின்றனர். பல்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்ட வாகடம், பரராசசேகரம் செகராசசேகரம் போன்ற மருத்துவநூல்களே எமது நாட்டில் சித்த வைத்தியத்திற்கான பொக்கிசங்களாக கருதப்படுகின்றன.

இவ்வாறு சித்தர்ளால் வளம் படுத்தப்பட்டதாக கூறப்படும் மருத்துவமுறை வெகு காலமாக குரு - சீடவழி முறையாகவே மக்கள் மத்திக்கு பயன்பட்டது. இவ்வாறு நெடுங்காலமாக பயன்பட்ட மருத்துவமுறைக்கு ஒருசிலரே பிற்காலத்தில் நூல் வடிவம் கொடுக்முன் வந்தனர். இத்தகைய நூல்கள் தமிழ் சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளிலும் தோன்றின. சமஸ்கிருதத்தில் நித்தியானந்த சித்தரின் ''ரசரத்னகரம்'' சோமநாதரின் ரசேந்திரா சூடாமணி'' ரவிகுப்தாவின் ''சித்தசாரம்வறித்'' சாரங்கதார சம்ஹித'' என்பனவற்றைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். பாதரசம், கெந்தகம் முதலான கனிப்பொருள்களைப் பயன்படுத்தி வடிகட்டுதல் தாழ்தல் போன்ற இராசாயன செய்முறைகள் மூலம் தயாரிக்கப்படும் இரச மருந்துகள், குளிகைகள் பற்றி எடுத்துரைக்கும் முதலாவது வடமொழி நூல் ''சாரங்கதார சம்ஹித'' வாகும். இந்நூலானது கி.பி. **1300** ஆம் ஆண்டளவில் எழுதி முற்றுப் பெற்றிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. சாரங்கதாரர் தாம் அறிமுகப் படுத்தியுள்ள இரசமருந்துக்கள் பலவற்றுக்கும் சித்தர்களே மூலகர்த்தாக்களாவர் என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழிலே திருமூலர் முதலான பதினெண் சித்தர்களின் பெயர்களில் மருத்துவ நூல்களை இன்று காணக்கூடியதாக உள்ளது. திருமூலர், அகஸ்தியர், சட்டமுனி மச்சமுனி, கமாலமுனி, போகர், புலிப்பாணி, கொங்கணர், கருவூரர், கோரக்கர், உரோமரிஷி, யூகி, வரகுஷி, சிவவாக்கியார், ராமதேவர், இடைக்காடர், சுகர், நந்தீசர்என்போர் இப் பதினெண் சித்தருள் அடங்குகின்றனர். இவர்களுடன் தேரையர், தன்வந்திரி, வாண்மீகியா, சுந்தரானந்தர், காலாங்கிநாதர் போன்றோரின் பெயர்களிலும் தமிழில் மருத்துவ நூல்களைக் காணமுடியும். சித்த மருந்துகள் பற்றி எடுத்துரைக்கும் தமிழ்நூல்கள் மிகவும் எளிமையான கவிதை நடையில் எழுதப் பெற்றுள்ளன.

தமிழிலே உள்ள சித்தர் மருத்துவ நூல்களில் பெரும்பாலானவை கி. பி. **16** ஆம் நூற்றுண்டிற்குப் பிற்பட்ட காலப்பகுதிகளில் எழுந்தன என கருதப்படுகின்றன.

இடங்களுக்கிடங்கள் கொண்டுசெல்லப்பட்டு, சித்தர்களால் பேணப்பட்டு, வளமாக்கப்பட்ட சித்த வைத்தியம் **20**ம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் மக்கள் மத்தியில் மக்களோடு ஒன்றிவாழ்ந்த வைத்தியர்களால் வளர்க்கப்பட்டது. இவ்வைத்தி


யர்கள் நோயுற்ற மக்களின் இல்லங்களை நாடிச்சென்று பிணிதீர்க்கும் பெரும்பணி செய்தார்கள். பரம்பரை பரம்பரையாக இப்பெரும் பணியில் ஈடுபட்டுவந்த குடும்பங்களை மக்கள் வழிபாட்டிற்குரியவர்களாக மதித்ததை எமது நாட்டிலும் காணக்கூடியதாக இருந்தது.

“மக்களுக்கு தொண்டாற்றுபவனே மகத்தானவன்” என்பது அறிஞர் வாக்கு இத்தகைய வாய்ப்பை கொடுக்கின்ற வைத்திய தொழில் இன்றைய காலகட்டத்திலும் சிறப்புடைய ஒரு தொழிலாகும். ஆனால் கால ஓட்டத்தினால் ஏற்படுகின்ற சிதைவுகளில் சிக்கிக்கொள்ளும் சில வைத்தியர்கள் மக்களுக்கு தொண்டாற்றுவதை விடுத்து பணத்தை குறியாகக் கொண்டும், ஆடம்பரவாழ்க்கையை எண்ணி போலித்தனமான நடைமுறைகளைக் கைக்கொண்டும் மக்களை மறந்து அழிவுப்பாதையை தேடிக்கொள்கிறார்கள்.

ஒரு நாட்டினுடைய வளர்ச்சியை அந்நாட்டின் தேசிய செல்வங்களின் வளர்ச்சியைக் கொண்டு கணிப்பிடலாம் உதாரணமாக 1949 ஆம் ஆண்டு விடுதலை பெற்ற சீனாவில் அந்நாட்டின் தேசிய வைத்தியமான “அக்யூபங்சர்” (Acupuncture) வைத்திய முறை தொடர்ச்சியாக துரித வளர்ச்சிபெற்று மேற்கத்திய வைத்திய முறைக்கு சமானமாக எழுந்தது. 1966 ஆம் ஆண்டு அந்நாட்டில் எழுந்த கலாச்சார மாற்றத்திற்கு பின்பு அந்நாட்டின் வைத்திய முறை மேலும் மெருகூட்டப்பட்டது. கிராமங்கள் தோறும் ஒவ்வொரு இல்லங்களுக்கும் சென்று மக்கள் பிணியறிந்து தீர்க்கும் மருத்துவ நடைமுறையினை அந்நாட்டின் தலைவன் ஏற்படுத்தினான். வெறுங்கால் (BAREFOOT - DOCTORS) வைத்தியர்கள் என அழைக்கப்படும் வைத்தியர்கள் இல்லங்கள்தோறும் சென்று மக்கள் பிணிதீர்க்கும் பெரும்பணியில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறாக வளர்ச்சி பெற்ற அந்த வைத்திய முறையினை இன்றைய உலக நாடுகளே வலிந்து தேடி ஓடுகின்றன.

எமது நாட்டிலும் 1958 ஆம் ஆண்டிற்குப் பின்பு ஏற்பட்ட தேசிய உணர்வின் காரணமாக இன்று சுதேச வைத்தியமுறை ஓரளவு வளர்ச்சிகண்டு வருகிறது. இத்துறைக்கு அரும்பணியாற்றிவரும் ஈழத்தின் முதலாவது சுதேச வைத்தியக்கல்லூரி “யாழ் - லங்கா சித்த ஆயுள்வேத வைத்தியக்கல்லூரியாகும். இக்கல்லூரி பொன்விழா காணும் இவ்வேளையில் எமது சுதேச வைத்தியத்துறை சீன ‘அக்யூபங்சர்’ போன்று உலகமக்களால் நேசிக்கப்படுகின்ற ஒரு காலத்தை எண்ணி, அதற்கான சமுதாயத்தை அமைக்க எண்ணி நாம் அயராது உழைப்போமாக;

நல்லுணவை அளந்தெடுத்து அருந்துபவனுக்கு
ஆயுள் விருத்தி உண்டாகிறது.



*Students Representatives L. A. M. C. Jaffna 1980*



FINAL YEAR STUDENTS
1980

*Fore Excellant*

PHOTO STAT COPIES

VISIT:

MAHARAJAH INVESTMENTS Ltd.

122, K. K. S Road - Jaffna.

PHONE: 8267

*With the Best Compliments From:*

VISIT

REFINE & Co.

47, GRAND BAZAR

JAFFNA.

SPACE DONETED BY:

Joy Hardware Stores

No. 214, K. K. S. Road - Jaffna.

With Best Compliments From:

A. K. S. & SONS

JEWELL HOUSE

JAFFNA.

ரோயல் டிஸ்பென்ஸறி

PHONE 397 JAFFNA

With best Compliments from;

*New City Hardware Traders*

GENERAL HARDWARE MERCHANTS

*3, Thanankilappu Road*

*CHAVAKACHCHERI.*

Telephone: 232

WITH BEST COMPLIMENTS FROM

**DEVI JEWELLERS**

Jeweller & Gem Merchants

131, Kasturiar Rd.

JAFFNA

*With the Best Compliments From:*

# NATHAN'S

17, Modern Market,
JAFFNA.

PHONE: 7540

BEST WISHES FROM:

# அண்ணா தொழிலகம்

இணுவில் தெற்கு - இணுவில்

தொலைபேசி: 7418

கிளை: இல. 1, மத்திய சந்தை
சுன்னாகம்.

*With Compliments From:*

# DURAIAPPAH PATHAR GOPALASAMY

Jeweller & Gem Merchant

*82/5, Kasturiar Road. - JAFFNA.*

PHONE: 270

With Best Compliments From:

பிடவைகள் தயாரித்த உடைகள் சாய்ப்புச் சாமான்களுக்கு

# (SVP) சிவம்

14 A. மின்சாரநிலைய வீதி,
புதிய சந்தை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7423

BEST WISHES FROM;

## CEYLON INDUSTRIAL ENGINEERING WORKS

158, STANLEY RD.
JAFFNA.

T'phone: 7426 T'grams: 'PUMA'

*With Compliments From:*

*BATTARY REPIARS OF NORTH*
*AGENT FOR DAGANTE BATTARY*

## THURAI & Co.

23/3, STANLEY RD. JAFFNA.

WITH BEST COMPLIMENTS FROM

Importers and Distributors of Motor Sparees

## VIJITHA MOTORS

43, Stanley Rd. JAFFNA.

T'phone: 7735

With best Compliments from;

## MANIAMS TEXTILE

*No. 16, New Market*
*JAFFNA.*

T Phone: 7545

# அமிர்தவல்லி

வைத்திய கலாநிதி வ. சிவப்பிரகாசம், டீ. ஏ. எம் ( இலங். )
சர்மரோக விசேடவைத்தியர் ( சித்த )
விரிவுரையாளர், யாழ் / லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக்கல்லூரி

ஆச்சரியப்படுகிறீர்களா? இப்பெயர் கதை காவியத்தைக் குறிப்பிடுவது அல்ல. சாதாரணமாக எங்கும் காணக்கூடிய ஒருவகைத்தாவரத்தின் பெயராகும். கொடி இனத்தைச் சேர்ந்த இது மணற்பாங்கான இடங்களில்வளர்வது, மரங்களைப்பற்றி படர்வது, விழுதுடன் கூடியது. மருந்துவகைத்தாவரங்களில் ஒன்றாகும். இக்கொடித் தண்டு 1½ தொடக்கம் 2அங்குலசுற்றளவுள்ள துண்டுகளாக மருந்துக்கடைகளில் விற்கப்படுகிறது. இதன்இலையை நெருப்பனலில்வாட்டிக் குழந்தைகளின் கபக்கட்டிற்கு உச்சியிலும் நெஞ்சிலும் போட்டுவைப்பது தாய்மார்களின் வழக்கம்.

அடடா சீந்தில்தான் குறிப்பிடப்படுகிறதென்பீர்கள் உண்மைதான். தாய்மார்களின் பாவனையிலிருந்து அனேகருக்கு சீந்தில்பற்றித்தெரியக்கூடியதே. ஆனல் மேற்படிபெயர் கருத்துச்செறிவுள்ள அளகானபெயராகப் பொருந்துகிறது. இன்னும் இதற்கு அமுதவல்லி, சோமவல்லி, அமிர்தக்கொடி, குண்டலி என வேறுபலபெயர்களும் உண்டு இச்சீந்திலானது பொற்சீந்தில், நற்சீந்தில் (சீந்திலின் சிறப்புக்கருதி நற்சீந்தில் என அழைக்கப்படுகிறது) எனஇருவகைபடும். பேச்சீந்தில்என வேரொருஇனம் உண்டென்றும்அது கருடன் கொவ்வை என்றும் குறிப்பிடப்படுவதுண்டு.

விசேட அம்சங்கள்: இப்தார்தம் கைப்புச்சுவையைக்கொண்டது. பிரிவுத்தன்மையில் (விபாகம்) காரமாக மாறுகிறது. இதைத்தொடர்ந்து பாவித்துவருவதால் குறிப்பிட்ட இச்சுவையாதியனவற்றிற்கு வரக்கூடியதான வாதக்குனம், சரீரதாதுக்கள் வறளல், இரத்தக்குழாய்களில் நீள்மீட்சிக்குறைவு ஆகியவைகள் உண்டாவதில்லை மேலும் இதற்கு இருதயபலம், தாதுப்பலன், புலன்களுகுத் தெளிவுஅமைகின்றன. இவை இதன்விசேடஅம்சங்களாகும். அசிந்தியம்: சீந்திலுக்கு மேற்காட்டிய சிறப்பியல்புகள் இதற்கியல்பாயுள்ள உஷ்ணவீரியம் பிருதிவி பூதியகுணத்திஞல் மட்டும்அன்றி சிந்தனைக்கு அப்பாற்பட்டதான அசிந்தியத்திஞலும் அமைகின்றது.

அமிர்தம்: அமிர்தம் உயிர்காக்கும் வன்மையுடையது. தேவர்கள் அமிர்தம்உண்டு நெடிது வாழ்ந்தார்கள், என்பது புராணம். நம்மவர்கள் மூலிகைகளுள் உயர்வான மூலிகையாக சீந்திலைக்கையாண்டு அமிர்தம் கண்டார்கள். இதனை

''போந்திடு மிந்த மூலி புவியினி லுள்ளதான
வாய்ந்திடு மூலிகட்குள் வானமிர் தென்று ரைப்பர்

என இருபாலைச்செட்டியாரின் வைத்தியப்பாடல் உணர்த்துகிறது.

நன்கு முற்றிய சீந்தில்தண்டுகளை வெட்டி தோல்போக்கி இடித்துநீரில்இட்டு ஒரு நாள் வெயிலில்வைத்து மறுநாள் அடியில்படிந்தமாவை இடித்து உயர்த்துவதே அமிர்தம் என்று அழைக்கப்படும்.

கைப்புச் சர்க்கரை: மதுமேகம் என்னும் சர்க்கரை இழிதல் வியாதியில் சர்க்கரைக்குச் சர்க்கரையாக அதாவது சத்துப்பொருளாக தித்திப்பின் திவ்விய அமிர்தமாக சீந்தில்மா பயன்படுகிது. இனிப்புக்குப் பகைச்சுவை கைப்பு என்பர். இனிப்பைப் போக்க இக்கைப்புடைய மா (அமிர்தம்) உபயோகிக்கப்படுவதால் அமிர்தசற்

கரை என்று கைப்புச்சர்கரைஎன்றும் பெயர்பெறுகிறது. இதுவே வடமொழியில் குடூசி ஸதிவம் எனப்படும்.

> 'அமிர்தவல்லிக்கொடி பக்கார முண்டிடத்
> திமிருறு மேகநோய்த் தீயெலாம் மாறுமே'

என்பது தேரர் பாடல்

### தகமை

இது இன்னும் இதயத்தாகுஎன்னும் கொலனறித்து ரம்போஸிஸ் ஆகியவியாதி அமையக்காரணியான கொலஸ்ட்ரால்என்ற கொழுப்புப்பொருட்களை மட்டுப்படுத்தவும் இந்தக்குழாய்ச்சுவர்களின் தடிப்பை குறைத்துத்தன்னிலைப்படுத்தவும் தகமையானதெ கற்றறிந்தோர்கருதிற்கொளுகின்றர். 'வளந்திடுமேதசைக்குறைக்கும்' என்னும் வைத்தியப் பெரியார்ஒருவரின் பாடல்அடியும் இங்குகவக்கத்தக்கது. தூயஉடலையும்இது மட்டுப்படுத்த உதவுறது.

### தாம்பிரச்சத்து

இம்மூலிகை தாம்பிரலோகச்சந்துகொண்டதென முதுவைத்தியர்கள் கருதுகின்றனர். களிம்பில்லா இச்செம்பால் நரம்புகள்திண்மைபெறுவதுடன் எத்தனையோபிணிகளைக்கண்டிக்கும் என்கிறார்கள். எடுத்துக்காட்டாக,

> குட்டம் பதினெட்டும் குஞ்சரத்தின் மேற்சொறியும்
> கட்டம் பெரிதாம் கயநோயும்;

என்று இது பற்றித்தேரையர்காட்டும்குணமும் செம்பின்குணத்தோடு ஒப்புநோக்கத்தக்கது.

### காயசித்தி

சீந்தில் - சீந்தில் சர்க்கரைக்கு பசியத்தூண்டும் தன்மையும் தாபத்தைக்குறைக்கும் குணமும் இருப்பதுடன் கிழத்தனத்தைபோக்கி இளமையை உண்டுபண்ணி வியாதி தீர்ப்பதான இரசாயனகுணம் நிறைந்துள்ளது. எனவேஇது காயசித்திஔஷதியாகக் கருதப்படுகிறது. இதனால் அமிர்தசற்கரைஆதியாம் மருந்துக்கள் வைத்தியஉலகில் பெருமைபெற்று வருகிறதெல்லாம்.

### ஔஉஷதியும் மருந்தும்

நோய்நீக்கத்தக்தான ஒருஔஉஷதி அதற்கிணையாக பிறிதொரு ஔஉஷதியுடனே அன்றிபலஔஉஷதியுடனே சேரும்பொழுது தனிச்சிறப்புற்றமருந்தாகஅமைகிறது. இதனால் பலனும்அதிகமாகும். சீந்தில் பற்றிக்குறிப்பிடும்போது மேற்கொண்ட கருத்துக்கொப்ப சங்கப்புலவராயிருந்த மருத்துவர் தாமோதரனார்,

> 'சீந்தி நீர்கண்டம் தெறிசுக்குத் தேனளாய்
> மோந்தபின் யார்நம் தலைக்குத்தில் (லை)'

என வலியுறுத்திக் கூறுவதைக்காணலாம்.

### மருந்தும் அனுபானமும்;

ஒரு நோய்க்குப் பலமருந்தல்ல, பலநோக்கு ஒருமருந்து கண்டவர்கள்சித்தர்கள் ஆகவேஇவர்கள் முத்தோஉஷதத்துவரீதியில் அநுபானங்களை மாற்றிமாற்றி வியாதிகளைக்குணப்படுத்தும்இயல்பு பெற்றிருந்தனர். இந்தஅடிப்படையில் சீந்தில்மாவுக்கு அதாவது அமிர்தசக்கரைக்கு பலவேறு அநுபானங்களை அமைக்கும்வகையை பின்வரும் பாடல்கள்மூலம் அவதானிக்கமுடிகிறது. இது அமிர்தசகரைமருந்துகளுக்கும் பொருந்தக்கூடியதாகும்.

'நலமுறு நெய்யே வாதத்திற் காகும்
நவில் பித்தஞ் சருக்கரை போக்கும்
நிலவுறுங் கபத்தைத் தேன்மிகதிக்கிரும்
நீண்ட கில் வாயுவைச் சுக்காம்'
'வாதரக்தம் தீர்க்கும் வளரா மணக்கெண்ணெய்
கோது மலபந்தம் குளம்.' (குளம் - வெல்லம்)
'சிந்திலெருக்கின்பாலிற் றேள்விடத்தைத் தீர்குமல்லான்
மாந்தமொடு பாலர் கபமாறுமே - சீந்திலமர்
சர்க்கரைகுத் திரும் தனுவா மதுமேகத்
தர்க்கமேன் வாகடத்தைச் சார்.'

தைத்திய பாவனைக்கு;

தாமரைவித்து, தாமரைஅல்லி, ஆவரசபஞ்சாங்கம் வகைக்கு பத்து கழஞ்சு. சாதிக்காய், வசுவாசி, நற்சீரகம், சாதிபத்திரி, கராம்பு, ஏலம், அதிவிடயம், கோட்டம், குருசாணி, நன்னாரி, முத்தகாசு, இலுப்பைப்பூ நற்சந்தணம். வனகக்கு 1கழஞ்சு கஸ்தூரி, புனுகு, அபின், (கஞ்சா) வகைக்கு ½கழஞ்சு. சீனி 1பலம் (16கழ) இதன் மொத்தநிறைக்கு சீந்திற்சர்க்கரை. பாகப்படிசெய்து பத்திரபடுத்தவும்;
திரும்நோய்கள்;

மேகம்இருபது, வெட்டை, கிரந்தி, நீரிழிவு, துன்மாங்கிஉஷஅடைப்பு, தேகவரட்சி, புகைச்சல், உள்ளுருக்கு, ஊண்உருக்கி ஆயபலபிணிகள்திரும்.
பொதுப்பாவனை;

சிந்தில்சக்கரை வகைக்கு 32கழஞ்சு. அதிமதுரம், நெல்லிவற்றல், நெரிஞ்சில்வித்து, நிலப்பனைக்கிழங்கு சந்தணதூள், சன்னலவங்கப்பட்டை, சிரகம், ஏலம், சாதிக்காய் வகைக்கு 1பலம் (8கழ). இச்சூரணத்துக்குச்சமஎடை கற்கண்டுதூள்சேர்த்து தக்க அனுபானங்களுடன் உட்கொள்ள மதுமேகம், வெள்ளை, தாபம், தாகம் வரட்சி, இவைகளைக் கண்டிக்கும். சரீரபுஷ்டிஉண்டாகும்.

சித்தில்தண்டு 8கழஞ்சு. மல்லி, அதிமதிரம், சோப்பு, ரோசாமொட்டு, தேசிப்பழத் புறத்தோல்வகைகழுக்கு 1கழஞ்சு. குடிநீர்காச்சி கற்கண்டு கூட்டிப்பருகிவர வாதரக்தம், மேகம், ஆமவாதம், சுரம், கபக்கடு, தூர்ப்பலம் குணமாகும்.
சிந்தில் பாகு;

அமிர்தச்சற்கரை 32கழ. கரிசாலைச்சூரணம் 32கழ. சாதிக்காய், சாதிபத்திரி, மல்லி செம்பகமொட்டு, கடுக்காய்ப்பூ, நற்சந்தணத்தூள், இலவங்கப்பட்டை, சுக்கு, ஏலம், குங்குமப்பூ வகைக்கு 2கழ. கற்கண்டு மேற்படி இத்தூளுக்கு சமஎடை. பசுநெய் தக்களவில்விட்டு அனைத்தையும் பிளித்துவைத்துக்கொண்டு சிறுநெல்லிக்காய் பிரமாணம் காலை, மாலை உட்கொள்ள பிரமேகம், வெள்ளை திரும் பலம்புஷ்டி உண்டாகும்;

அமிர்தாமலகத்தைலம்;

சித்திலக்கொடி, நெல்லிவற்றல் வகைக்கு 50 பலம். 8மரக்கால்நீர் விட்டு 1மரக்காலாகவற்றவைத்து இக்காயத்தில் நல்லெண்ணெய் 2 படியும் வெள்ளாட்டுப்பால் 2படியும்கூட்டி மேலும் கடுகுரோகணி, இலவங்கப்பத்திரி, ஏலம், கடுக்காய், நெல்லிவற்றல், தாண்டிதத்தோல், செஞ்சந்தனம், அதிமதுரம், பூலாங்கிழங்கு, சிற்றாமட்டி வேர், கோரைக்கிழங்கு, திராட்சை, செங்கழுநீர்கிழங்கு, தாமரைக்கிழங்கு, நன்னாரி,

நிலப்பூசனி, கொட்டிக்கிழங்கு, கீழ்காய்நெல்லிவேர், வெட்டிவேர் வகைக்கு 4வராக னெடை பால்விட்டரைத்துக், குழப்பிச்சேர்த்து மெழுகுபதம்வடித்து சிரசில்பொருத்தி ஸ்நானம் செய்துவர பித்தம், சிரரோகம், செவிரோகம், நேத்திரரோகம், உட்காங்கை ஆகியவை நீங்கும்.

அமிர்தவல்லி நெய்;

சீந்தில்தண்டு, வேப்பம்பட்டை, பேய்ப்புடோல் வகைக்குப் பலம் 10. குறிநீர் விட்டு 1 / 8 வற்றவைத்து நெய்படி 1கூட்டி பேய்புடோல், விலாமிச்சம்வேர், மஞ்சள், மரமஞ்சள், அகில், சந்தணம், தேவாதாரு, பூலாகிழங்கு, கோட்டம், ஏலம், வகைக்கு கழ 2 கூட்டி தக்கபடி பதத்தில்வடித்து ¼ பலவீதம் உட்கொள்ள கரும்உஷ்டம், சொறி, சிரங்கு, ரணம், படை, ஊரல் தீரும்.

குறிப்பு - மரக்கால் - 2 படி (1 குறுணி)

உசாவு நூல்கள்:

மதுரைத்தமிழ்ச்சங்க வெளியீடு வைத்தியாசார சங்கிரகம், குணப்பாடம் பதார்த்த பஞ்சகுணமஞ்சரி, அஷ்டாங்க ஹிருதயம், அகத்தியர் வைத்திய காவியம் தேரையர் தைலவர்க்கம் திருவள்ளுவமாலை, வைத்தியரத்தினம்

அ. வி. இராசரெதத்ினம் அவர்களின் கைநூல்.


*Importers of*

*New & Reconditioned HONDA MOTOR CYCLES*

*&*

*Spare partes Etc.*

**T. Senathirajah & Sons**

**20/4 Stanley Road**

JAFFNA.

*T'phone: 7192*

சகல பவுண் தங்க நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்

Yappan Jewellers
64, Kannathiddy Road,
JAFFNA.

சகல மருந்துச் சரக்கு வகைகளுக்கும் தொடர்புகொள்ள
க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
பெரியகடை,
யாழ்ப்பாணம்

G. S. Kailasampillai & Sons,
76, Grand Bazaar, — Jaffna.
Phone: 7135

அழகிய பவுண் நகைகள், தங்கப்பவுண், வைரங்கள்
யாவற்றிற்கும்
சிறந்த நகை மாளிகை

கே. என். எம். மீறுன் சாகிப்
கன்ஞநிட்டி — யாழ்ப்பாணம்.
போன்: 585

தரமான தங்க நகைகளுக்கு
இன்றே விஜயம்செய்யுங்கள்

து. கிருஷ்ணசாமி & சன்ஸ்
55, கன்ஞநிட்டி — யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு

★ ஸ்ரீ திருப்பதி ஏஜன்ஸி ★

நம் 130, 4ம் குறுக்குத் தெரு

கொழும்பு

தொலைபேசி இல: **29676**

உரிமையாளர்:- R. திருவாதிரை

**திருப்பதி ஸ்ரோர்ஸ்**

*மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*தொலைபேசி 788, 7119.*

சகல தங்க நகைகள் விரும்பிய டிசைன்களில் பெற்றுக்கொள்ள

GOLD HOUSE JELLER

KANNARHIDDY,

JAFFNA.

சகல வகையான மோட்டார் உதிரிப்பாகங்கட்கும்

சிறந்த ஸ்தாபனம்

**POPULAR MOTOR STORES**

Stanley Road,

JAFFNA.

ஆயுள்வேத வைத்தியக் கல்லூரியின்
பொன்விழா சிறப்புற எமது நல்லாசிகள்.

காட்சிக்கும் பலனுக்கும் சரிவருவதும்
சமய அனுஷ்டானத்துக் கேற்றதும்

**திருக்கணித பஞ்சாங்கம்**

பல உண்மைகளை முன்னதாகவே எடுத்துக்கூறி
மக்களின் ஏகோபித்த ஆதரவைப்பெற்று முன்னணியில் திகழ்வது

**சோதிட மலர்**

(இலங்கையின் ஒரேயொரு சோதிட மாத சஞ்சிகை)

வெளியீடு:

# திருக்கணித நிலையம்

மட்டுவில் - சாவச்சேரி.

With best Compliments from;

# JAFFNA ELECTRICALS

6, Stanley Road,
JAFFNA.

* ELECTRICAL DEALERS,
* IMPORTES OF ELECTRICAL GOODS
* ELECTRICAL CONTRACTORS

phone: 7743

*With best Compliments from;*

## City Marine Services

**Repires of all kinds of Diesel Engines**

Prop. :-

K. K. SIVAKANGAI.
25, BEACH ROAD,
JAFFNA.

*Dealers in: HARDWARE*

## COLOMBO TRADE CENTRE

**36, Stanly Road,**
**JAFFNA**

## Murugan Turning Industries Works

முருகன் ரேணிங் இன்டஸ்ரியல் வேர்க்ஸ்

SPECIALISTS OF ALL KINDS OF TURNING WORKS
MOULDING OF WATER PUMPS & LAUNCH PARTS Etec.

43, STANLEY RD JAFFNA

# பண்டைய மருத்துவம் அழிந்தது ஏன்

வைத்தியமணி பே. பிலிப்ஸ் ச.நீ.
வ.இ.சு.வை. சபை உறுப்பினர்

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக கொடிகட்டிப் பறந்த பரராசசேகரன், செகராசசேகரன் அரசர்களின் அரசமதிப்பைப் பெற்ற எம் சித்த மருத்துவம் இன்று அருகிக் கருகி வருவது ஏன்? இது சிந்திக்கத் தெரிந்த ஒவ்வொரு மனி தனது சிந்தையிலும் உதிக்கும் கேள்விகளில் ஒன்ருகும்.

இதை மிக நுணுக்கமாக ஆராயப்போகில் பலவித உண்மைகளை இங்கு இன்று காணக்கூடியதாகவுள்ளது.

முதலாவது யாவராலும் எந்நாளிலும் எந்த இடத்திலும் எந்த ஒரு வைத்தியராலும் கையாளப்படுவது தேன். தேனை எடுத்துப்பார்ப்போம். தேன் என்பது யாவருக்குமே ஒரு அமிர்தம் போன்றது. இதன் அரும்பெரும் பெருங்குணங்களே அதிகம். இதனைக்கொண்டு மாற்ற முடியாத நோய்களே அரிதெனலாம். வாதரோகிக்கும் சரி - பித்தரோகியாளுலும் - கயரோகிக்குமே மிகச் சிறந்ததொரு அனுமானமாகும். மனித உடலுக்குத் தேவையானதை ஆக்கவும் - தேவையற்றவைகளை அகற்றவும் வல்லது. தேன் - இருமல், சளி, தொண்டைக்கட்டு, அவியல் சுரம், புண்பாடுகள், கிரகணி, சன்னிபாதம், குடல்புண் இவைகளையெல்லாம் மாற்றவல்லது. இது யாவரும் அறிந்த உண்மையாகும். தேனைப்பற்றிச் சொல்லப்போனுல் நாவில் உமிழ் நீர்ச்சுரப்பு உள்ள மட்டும் சொல்லலாம். முதலில் தேனை உண்டு தேனிலுல் முடியாதவிடத்து வைத்தியசாலையை வைத்தியனை நாடினுர்கள் பலர். தேனுக்கு நிகர் தேனேதான். ஆனுல் இன்று இத்தகை மகத்துவம் பொருந்திய தேனிலும் இன்று நோய்கள் தீரவில்லை - ஏன்? இன்று உண்மையான தேனே கிடைப்பதரிது. நவநாகரீகமாக செயற்கைத் தேனைக் கண்டுகொண்டார்கள். தேர்ச்சிபெற்ற வைத்தியர்களாலும் கண்டுகொள்ள முடியாத அளவுக்குத் தேனைத் தேடிக்கொண்டார்கள். பனங்கட்டிப்பாணி, கித்துள்பாணி, அதற்கும் செயற்கை மெழுகு. எல்லாமே கலப்படம். இவைகளால் மருந்தே பாழ். இவைகளை எங்கள் பண்டைய மருத்துவம் அழிவதற்குக்காரணமாகும். இப்படியே எமது மருத்துவத்தில் கஸ்தூரி கிடைப்பதில்லை. தரமான குங்குமப்பூ காண்பதரிது. இன்னும் பல பல.

இன்னமும் சாதாரண ஒரு மருந்துப்பொருள் மிளகு. மிளகு இல்லாத வீடே இல்லை.

பத்துமிளகு கையிலுண்டானுல்,
எந்தப் பகையாளி வீட்டிலும் சாப்பிடலாம்.

இது ஒரு பழைய பல்லவி. மிளகுள் குணுதிசயங்களை உற்றுக்கவனித்தால் வாயில் கடுரசமும் உஷ்ண வீரியமும் வயிற்றுள்சென்று சீதவீரியத்தையும் வேதனை சாந்தியையும் அளிக்கிறது. இதை மேலைத்தேசத்தவர் கவனித்து தமது போசனத்துடன் நாகுக்காக மிளகைச் சேர்த்துக் கொண்டார்கள். இந்த மிளகினுல் எந்த வேஷத்திலும் ஆடமுடியும். இந்த மிளகினுல் சீரண சக்தி வேண்டுமா? உண்ட உணவு சீரணமாக வேணுமா? பசிதீபனத்தை உண்டாக்கவேணுமா? விஷத்தை முறிக்க வேண்டுமா? அசீரண வயிற்றுப் போக்காக நிறுத்த வேண்டுமா? கிருமித் தொல்லைகளை அகற்ற வேணுமா? இப்படி பல பல குணங்களைக் காணக்கூடியதாக

உற்றது. ஆனால் இன்றைய மிளகோ - நவநாகரீக மனிதன் மிளகையும் ஆக்கக்கண்டு கொண்டான். செயற்கை மிளகு பப்பாசி விதை - உலர்ந்த பப்பாசி விதை இதனால் வியாதி தீருமா? வைத்தியம் பாழ்படாதா? இந்தப் பரிதாப நிலை மாறுமா?

அன்று தொடக்கம் இன்றுவரை எந்த வைத்தியத்துறைகளிலும் இல்லாத ஒரு பாரம்பரியமுறை குழந்தைக்கு முக்கூட்டு மாத்திரை - குழந்தை பிறந்தபின் ஒரு ஒரு வைத்தியனை நாடி கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ ஆகியவற்றிலான முக் கூட்டு மாத்திரை. குழந்தையின் உடல் வளர்ச்சிக்கும் கிரந்தி முதலாய பலரோகங் கள் யாவற்றிற்கும் இன்றியமையாத மும்மூர்த்திகள் மும்மாத்திரை - இன்று அது கிடைக்கிறதா? கொடுக்கப்படுகிறதா - அப்படிக் கொடுப்பவர்களுக்குத்தான் இன்று உண்மையான உயிர்ச் சரக்குகள் கிடைக்குமா? முதிர்ந்த பலாப் பொருக்கிலான கோரோசனை - வெந்தயத்தையோ வேறு எதையோ பயிராக்கி - கலர் ஊட்டி பதப் படுத்திய குங்குமப்பூ, இப்படியே செயற்கை முறையினாலாக்கிய கஸ்தூரி இவைகளி னால் குழந்தை குணங்காணுமா, எமது பழமை வாய்ந்த மருத்துவம் இளமை யடைந்து நிலைக்குமா?

மருந்துகளைத் தயாரிக்கும் அம்மி, குழவி, உரல், உலக்கை, செந்தூரங்கள் பஸ்பங்களைத் தயாரிக்கும் அகல்சட்டி, முட்டி, மூசை குப்பி, அதகபாதாள யந் திரம் வாலுகாயந்திரம், ஜெயநீர்யந்திரம் இவைகளின் தொல்லைகளினால் விடுபட விரும்பினான் மனிதன் - மருத்துவர்கள்.

பண்டைய மருத்துவம் பற்றில்லாமல் ஆனது. இம்மருத்துவம் ஒரு பாரம் பரிய சொத்து, பரம்பரைச் சொத்து இதை அழிய, மறையவிடாது கட்டிக்காப்பது அகில இலங்கைவாழ் வைத்தியர்களினதும் கடமையாகும்.

அப்பிரக செந்தூரம் செய்யவேண்டுமானால் நூறுபுடமிடவேண்டும். 1 புடம் இடுவதற்கு எத்தனை விருட்டிகள் தேவைப்படும். 10 விருட்டி சேர்க்க எத்தனை நாள் எத்தனை சாணம் சேரவேண்டும். ஒரு வைத்தியனின் வாழ்நாளில் 50 புடங்கள் வரை இட்டு வைப்பதும் அருமையாய்விடும். அதை முடிக்க மகன்தான் வரவேண் டும் அப்பன் ஐம்பது புடமிட்டு வைக்க மகன் தனது காலத்தில் நாற்பது புட மிடுவான். பேரன் மிகுதிப்புடமிட்டு செந்தூரம் காண்பார். அப்பன் தொழிலை அப்பன் கற்றுக் காசுதேடும் காலம் வந்தது. அப்பா செய்த செந்தூரத்தைக்கண்ட மகனின் விரக்திமனப்பான்மை பண்டைய மருத்துவத்தை அழிக்க உறுதுணையாயிற்று.

சித்தமருத்துவத்தை தனக்குப்பின் தன்வாரிசு. தன்மகன்தான் செய்யவேண் டுமென்றெண்ணினரே தவிர அதை ஒரு விவேகியிடமோ? அதை உலகறியச்செய்து வளம்படுத்தி-விளம்பரப்படுத்த அன்றைய வைத்தியர் பரம்பரை உணர்ந்திருக்கவில்லை இதனால் தனக்குத்தெரிந்தவைகள் - தான் அறிந்தவைகள் தான்கையாண்டவைகள் மற் றவர்களுக்குப் பயன்படாமல் அவருடனேயே அழிந்து ஒழிந்தன பொறுமை - எருமை ஒழித்தால் ஒற்றுமையுண்டு உய்வுண்டு. எங்கள் பண்டைய மருத்துவம் பல்லாண்டு காலம் அழியாது தழைத்தோங்குமென்பதில் ஐயமில்லை.

வளர்க பண்டை மருத்துவம் வளர்க. ஈழத்து மருத்துவர்.

# இங்கெல்லாம் செல்வதற்கு யார் உனக்கு விசா தந்தார்?

ஜெகதேவி தர்மலிங்கம்
3ம் வருடம்

"சல்பொனெல்லா" குறுப் கிருமியே நீ
தந்து விட்ட காச்சலது
நெருப்புக் காச்சலென எம்மைக் கொல்கிறதே
உனக்கேன் இந்த வீண் வம்பு சொல்லி விடு
சுகாதாரம் குறைவான இடங்களில் நீ வளர்ந்தாலும்
நீரில் பல காலம் நீ சீவிக்க முடிந்தாலும்
அழுக்கில் உன்னினத்தைப் பெருக்கி நீ மகிழ்ந்தாலும்
நாம் இருவர் நமக்கிருவர் என்பதனை ஏன் மறந்தாய்?

மனித உணவோடு உட்சென்ற நீ அங்கே
இனம் பெருக்கி மீண்டும் உன் பயணம் தொடர்கின்றாய்
இரத்தத்தின் உதவியுடன் ஈரல், மண்ணீரல்
என்கின்ற இடங்களைப் பார்த்து வரச் சென்றாயோ?
இங்கெல்லாம் செல்வதற்கு யார் உனக்கு விசா தந்தார்
கள்ளப் பாஸ்போட்டில் களவாய் சென்றாயோ?
ஓமான், ஈரான் என்றோராயிரம் இடமிருக்க
ஓடி ஏன் இங்கு ஒளித்திருக்கப் பார்க்கின்றாய்?

பித்தப்பையில் நீ மகிழ்வுடன் குடியிருந்து
சிறுகுடலின் நிணநீர்ப்பகுதிக்குச் சென்றங்கே
அழற்சி, புண்ணாதல் சிக்கல்களை ஏற்படுத்தி
அநியாயம் செய்வதைப் பெரிதாக நினைத்து நீ
மனமார மகிழ்கின்றாய் மனித உடலினுள்ளே
வேலையில்லாமல் இன்று இளைஞர்கள் வாடுகையில்
ஜொப்பாங்க் போம்இன்றி இந்த இலவசஜொப்
உனக்குத்தந்தவர் யார் சல்மோனெல்லா?

உன்நோயரும்பு நாட்கள் பத்துமுதல் பதினான்கு
நோயரும்பு காலத்தின் பின்நீ செய்கின்றவேதனைகள்
ஐயகோ யார் பொறுப்பார்நீயே சொல்லிவிடு
தலையிடி, பசியின்மை, குரலடைப்பு, இருமல்
இத்தனையும் போதாமல் சுரத்துடன்நடுக்கமும் ஒருபக்கம்
ஐந்தாம்நாளின் பின்உஷ்ணமும்கூடி எம்மை
எழுத்துநிற்க முடியாமல் படுக்கையில் போடுகின்றாய்
இதுவெல்லாம் எமக்குநீ விடுகின்ற சவால்களா?

இரண்டாம் வாரத்தில் பிதற்றலை ஏற்படுத்தி
மூன்றாம் வாரமதில் குடல் துவாரமுடன்
இரத்தமதை வெளியேற்றி நிலைகுலைந்து நிற்கின்றாய்
ஜேர்மனியின் எல்லையிலே திருப்பிவிடப்பட்டு

திக்குத் தடுமாறித் திணறிவந்த இளையர்கள் போல்
வைத்தியர்களிடம் உனேஇனம் காட்டிநிற்கின்ருய்
ஒவலாண்டாய்நீ ஓராயிரம் இடம் போயும்
இதன்பின் மீட்சி உனக்கேது சல்மொனெல்லா?

தடுப்புதனேச் செய்யாதோரில் தானே உன்
சாமத்தியத்தைக் காட்டி நீ நிற்கின்ருய்
குடிநீரில் நீஇருந்தால் குளோரீனில் மாளுகிருய்
T. A. B ஊசிக்கு உனரைவிட்டே ஓடுகிருய்
வெல்டிங்கும் வயரிங்கும் உனக்குத் தெரியாதே
எப்படி எம் உடம்பில் நீ வெல்ட் பண்ணப்பட முடியும்?
சுகாதார முறையில் நாம் அவதானமாயிருந்தால்
என்ருே ஒருநாள் உனே ஓரம் போக்கிடுவோம்.

---


★ கதிரை ★ மேசை ★ வாங்கு ★ ரீஃபோய்ஸ்

★ கிளாஸ் ★ பிளேட்ஸ் ★ ஐஸ்கிறீம் கப்ஸ் ★ ரேய்ஸ்

முதலியவைகள் வாடகைக்குப் பெற

இன்றே விஜயம் செய்யுங்கள்

"Beach Corner"

★ பீச் கோணர் ★

உரிமையாளர்: டாக்டர் திருமதி பேரின்பலஷ்சுமி பரம்சோதிநாதர்

19, பீச்ரோட்

யாழ்ப்பாணம்.


---

லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி பொன்விழாவுக்கு

எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்

சகல ரோகங்கட்கும் தொடர்புகொள்க

அன்பளிப்பு

**Dr. N. பாலகிருஷ்ணன்** D. A. M.

ஆவரங்கால்

பொன்விழாக் காணும் லங்கா சித்த ஆயுர்வேதக் கல்லூரிக்கு

எமது ஆசிகள்

சகல ஆங்கில மருந்து வகைகட்கும் எம்மை நாடுங்கள்

## சென்றல் பார்மஸி

77, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**Central Pharmacy**

77, POWER HOUSE ROAD.
JAFFNA.

*With the Best Compliments From:*

# The Lanka Ayurvedic Medical Hall

**Mullaithievu Road,**
**ODDUSUDDAN.**

**Dr. B. F. Rajakumar.** D. A. M.
**Dr. Mrs. Jamuna Rajakumar.** D. A. M.
**Dr. Jeevanathan Nickolas.** D. A. M.

மலர் மலர்க மறுமணங் கமழ

மருத்துவர் குலம் தழைக்க

எமது நல்லாசிகள்

# ஆரோக்கியவாச வைத்தியசாலை

எந்தவித நோயானாலும் ஒருமுறை கலந்தாலோசியுங்கள்.

அரசினர் அங்கீகாரம் பெற்ற வைத்தியர்கள்

வைத்தியாச்சாரி: லி. புஸ்பராணி
*Ayur. Dr. L. Pushparani*
*D. A. M. & R. I. M. P. (Ceylon)*
*Regd No. 6698*

வைத்தியமணி: பே. பிலிப்ஸ் ச. நீ.
*Ayur. Dr Philips J. P.*
*D A M & R I M P (Ceylon)*
*S M. P. (India) Regd. No. 1205*

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

லங்கா ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி பொன்விழாவுக்கு

எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்

★

அன்பளிப்பு

**DR. V. S. PONNIAH** D. A. M.

VALLABAMBIKAI DISPENSARY, KODIKAMAM.

# கி. பி. 1069 - இல் தமிழ் நாட்டில் இருந்த ஒரு வைத்தியசாலை.

பேராசிரியர் கா. இந்திரபாலா
யாழ். பல்கலைக் கழகம்

தமிழ் நாட்டிலே செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள திருமுக்கூடல் என்னும் இடத்தில் வெங்கடேசப் பெருமாள் கோயில் ஒன்று உண்டு. இக்கோயில் குறைந்தது ஒன்பதாம் நூற்றாண்டிலாவது அமைக்கப்பட்டிருக்கவேண்டும். என்று கொள்ளச் சாசனச்சான்று கிடைத்துள்ளது. இங்கே கி. பி. 1069 இல் வீரராஜேந்திர சோழனுலே பொறிப்பிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று உண்டு. இதுவே உலகத்திலுள்ள மிக நீண்ட கல்வெட்டாகும். இதன் நீளம் 55 அடி. கோயிலின் முதலாவது பிரகாரத்தின் கிழக்குச் சுவரிலே 540 சதுர அடி பரப்பினையுடைய இடத்திலே இது பொறிக்கப் பட்டுள்ளது. அக்காலத்தில் கோயிலுடன் இணைத்துக் கட்டப்பட்டிருந்த வைத்திய சாலை ஒன்றைப் பற்றி இக் கல்வெட்டுச் சில அரிய தகவல்களைத் தருகின்றது 1.

ஆதுலசாலை (Hospital)

வைத்தியசாலைகள் அக்காலத்திலே ஆதுலசாலைகள் அல்லது ஆதுரசாலைகள் எனப்பட்டன. திருமுக்கூடல் வெங்கடேசப்பெருமாள் கோயிலுடன் அமைந்திருந்த ஆதுலசாலைக்கு ''ஆதுலசாலை வீரசோழன்'' என்ற பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. இந்த ஆதுலசாலையிலே 15 நோயாளிகள் படுப்பதற்கு வசதிசெய்யப்பட்டிருந்தது. பாய்களே நோயாளிகளுடைய படுக்கைகளாகப் பயன்படுத்தப்பட்டது. ஆதுலசாலையிலும், கோயிலிலும் பயன்படுத்தப்படுவதற்காக 2 காசு கொடுத்து எழுபத்தைந்துபாய்கள் வாங்கப்பட்டன.

ஆதுலர். (Patients)

நோயாளிகள் பொதுவாக ஆதுலர் என்றும் வியாதிபட்டுக் கிடப்பார் எனவும் அழைக்கப்பட்டனர். வீரசோழனுல் ஆதுலசாலையிலே தங்கியிருந்த நோயாளி ஒவ்வொருவனுக்கும் ஒருநாளைக்கு ஒருநாழி அரிசி உணவுக்காகக் கொடுக்கப்படுவதற்கு வசதி செய்யப்பட்டிருந்தது. அத்துடன், வெளியிடத்திலிருந்து தூயநீர் கொண்டு வந்து, அதிலே ஏலரிசி, இலாமச்சம் ஆகிய வாசனைப் பொட்களைச் சேர்த்து அவர்களுக்கு கொடுப்பதற்காக ஒரு சேவகனும் நியமிக்கப்பட்டிருந்தான். நோயாளிகளுடைய நன்மைக்காக இரவு முழுவதும் ஒருவிளக்கு எரிப்பதற்கும் வசதி செய்யப்பட்டிருந்தது.

வைத்தியஞ் சொல்வான்.

ஆதுலசாலையில் இருந்த நோயாளிகளுக்கும் பிற கோயில் பணியாளர்களுக்கும் கோயிலின் வேதக் கல்லூரியில் இருந்த ஆசிரியர்களுக்கும் மாணக்கருக்கும் வைத்தியஞ் சொல்லுவதற்காக ஒரு வைத்தியன் நியமிக்கப்பட்டிருதான். கி. பி. 1069இல் இந்த ஆதுலசாலையின் வைத்தியனுக ஆலப்பக்கத்து சவர்ணன் கோதண்டராமன் அஸ்வத்தாம பட்டன் என்ற பிராமணன் பதவி பெற்றிருந்தான். இவனுக்கு சம்பளமாக ஒரு நாளைக்கு மூன்று ''குறுனி'' (90 கலம்) நெல்லும் எட்டுக் காசும் கொடுக்கப்பட்டன. அத்துடன் இவனுக்கு நிலமும் மானியமாக வழங்கப்பட்டிருந்தது.

சல்லியக்கிரியை பண்ணுவான். (Surgeon)

இந்த ஆதுலசாலையிலே சத்திர சிகிச்சை அல்லது சல்லியக்கிரியை (Surgery) செய்வதற்காகச் சல்லியக்கிரியை பண்ணுவான் ஒருவன் நியமிக்கப்பட்டிருந்தான். வைத்தியஞ் சொல்வானுக்கு இருந்த அந்தஸ்து இவனுக்கு இருக்கவில்லை. வைத்தியஞ் சொல்வான் ஒரு பிராமணன். பரம்பரைபரம்பரையாக அவன் முறைப்படி வைத்தியத்தைக் கற்றிருப்பான். சல்லியக்கிரியை பண்ணுவான் பிராமணனாக இருந்திருக்க மாட்டான். நோயாளிகளுடைய புண்கள், நோயுற்ற உறுப்புகள் ஆகியவற்றைத் தீண்டிச் சிகிச்சை செய்யும் பொறுப்பைப் பிரமாணர் ஏற்றிருக்கமாட்டார். அத்துடன், சத்திர சிகிச்சை நன்கு வளர்ச்சியடைந்து வைத்தியம் போன்று சிறப்புப் பெற்றிருக்கவில்லை. இக் காரணங்களுக்காக, சல்லியக்கிரியை பண்ணுவானுடைய அந்தஸ்துக் குறைவானதாகக் கருதப்பட்டு அவனுக்கு குறைந்த சம்பளமே கொடுக்கப்பட்டது. இவனுக்கு ஒரு நாளைக்கு ஒரு குறுணி (30கலம்) நெல் மட்டுமே கொடுக்கப்பட்டது.

பரிகாரம் பண்ணுவார். (Dispensers)

ஆதுலசாலையிலே பரிகாரம் பண்ணுவார் இருவர் நியமிக்கப்பட்டிருந்தனர். வைத்தியஞ் சொல்லுவான், நோயாளிகளுக்கு வேண்டிய மருந்துகளைச் சொல்லியதும் (Prescription) அவற்றுக்குத் தேவையான மருந்து வகைகளைப் பெற்று வந்து, மருந்துகளை ஆக்கி நோயாளர்களுக்குக் கொடுப்பது இவர்களுடைய கடமையாக இருந்தது. அத்துடன் மருந்து வகைகளை அவித்துக் கொள்வதற்கு வேண்டிய விறகையும் இவர்களே பெற்றுவர வேண்டியிருந்தது. இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சம்பளம், சல்லிக்கிரியை பண்ணுவானுக்குக் கொடுக்கப்பட்ட சம்பளத்தைவிடக் கூடுதலாக இருந்தது. இவர்கள் ஒவ்வொருவரும் ஒருநாளைக்கு ஒரு குறுணி (30கலம்) நெல்லும் ஒரு காசும் பெற்றனர்.

பரிகாரம்பண்ணி மருந்திடும் பெண்கள். (Nurses)

நோயாளிகளுக்குப் பரிகாரம் பண்ணி (Attending), மருந்தெடுப்பதற்காக (Administering Medicine) இரு பெண்டுகள் நியமிக்கப்பட்டிருந்தனர். பரிகாரம் பண்ணுவார் செய்து கொடுத்த மருந்துகளை நோயாளிகளுக்குக் கொடுத்துப் பொதுவாக அவர்களைக் கவனிப்பது இவர்களுடைய கடமை. இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு நான்கு நாழி (15கலம்) அரிசியும் அரைக்காசும் சம்பளமாகக் கொடுபட்டது.

நாவிதன். (Baber)

ஆதுலசாலையிலே வேலைபுரிவதற்கு ஒரு நாவிதனும் நியமிக்கப்பட்டிருந்தான். நோயாளிகளுக்கும், கோயிலின் வேதக் கல்லூரியில் இருந்த ஆசிரியர்களுக்கும் மாணாக்கருக்குக்கும் 'வேண்டும் பணி' செய்வது இவனுடைய கடமை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சாதாரணமாக நாவிதன் செய்கின்ற பணியை விடச் சிறு சத்திர சிகிச்சைகளைச் செய்வதற்கும் அவன் உதவியிருக்கலாம். பிற்பட்ட காலத்திலே நாவிதர் இத்தொழிலையும் புரிந்த காரணத்தினாலே பரியாரி எனவும் பரிகாரி எனவும் அழைக்கப்பட்டனர். அவனுக்கு ஒரு நாளைக்கு நான்கு நாழி (15கலம்) நெல் சம்பளமாகக் கிடைத்தது.

ஈரங்கொல்லி. (Washerman)

நோயாளிகளுடைய உடுப்புக்களையும் கோயிலின் வேதக் கல்லூரியில் இருந்த ஆசிரியர், மாணாக்கர் ஆகியோரது உடுப்புக்களையும் கழுவிக் கொடுப்பதற்கு ஓர் ஈரங்கொல்லி (வண்ணான்) நியமிக்கப்பட்டிருந்தான். இவனுக்கு ஒரு நாளைக்கு நான்கு நாழி நெல் சம்பளமாகக் கிடைத்தது.

குசவன்; (Potter)

ஆதுலசாலையிலும் கோயிலிலும் பயன்படுத்துவதற்கு தேவைப்படும் மட்கலங்களைச் செய்து கொடுப்பதற்காக ஒரு குசவன் நியமிக்கப்பட்டிருந்தான். இவனுக்குச் சம்பளமாக ஒரு நாளைக்கு ஒரு குறுணி நெல் வழங்கப்பட்டது.

திருமெய்காவல். (Watcher)

ஆதுலசாலையையும். கோயிலின் ஜனநாத மண்டபத்தையும் காவல் புரிவதற்காக திருமுக்கூடலில்வாழ்ந்த பேரையன்என்பவன் நியமிக்கப்பட்டிருந்தான். இவ்வாறு திருமெய்க்காவலாக நியமனம் பெற்றிருந்தவனுக்கு ஒரு நாளைக்கு நான்கு நாழி நெல்லும் ஒருகாசும் சம்பளமாகக் கிடைத்தது.

ஆண்டொன்றில் இடும் மருந்து. (Annual Stock of Medicines)

நாற்பது காசு செலவு, ஓர் ஆண்டுக்குத் தேவையான பிரதான மருந்து வகைகள் ஆதுலசாலையிலே வாங்கி வைக்கப்பட்டிந்தன. அந்த மருந்து வகைகள் பின்வருமாறு.

1. பிராஹ்மியம் கடுப்பூரி-ஒன்று. இது மருத்துவ நூல்களிலே குறிப்பிடப்பட்டுள்ள பிராஹ்மிய ரஸாயனமாக இருக்கலாம். எனக் கருதப்படுகிறது இதிலே 44 வகை பொருள்கள் சேர்க்கப்பட்டன. இம்மருந்து புத்தியைக் கூர்மைப் படுத்தி களைப்பை நீக்கி ஆயுளை நீடிக்கச் செய்யுமென மருத்துவ நூல்கள் கூறும்.

| | | |
|---|---|---|
| | | — இரண்டு படி |
| 2. | வாச ஹரீதகி | — ஒரு படி |
| 3. | தசமூல ஹரீதகி | — ஒரு படி |
| 4. | பல்லாதக ஹரீதகி | — ஒரு படி |
| 5. | கண்டீரம் | — ஒரு தூணி |
| 6. | பலகேரண்ட தைலம் | — ஒரு தூணி |
| 7. | பஞ்சாக தைலம் | — ஒரு தூணி |
| 8. | லசுநாதியேரண்ட தைலம் | — ஒரு தூணி |
| 9. | உத்தம கர்ணாதி தைலம் | — ஒரு பதக்கு |
| 10. | பில்வாதி கிரிதம் | — 2000 (வடகம் - Pills) |
| 11. | மண்டூகர வடகம் | — ஒரு நாழி |
| 12. | திரவத்தி | — 2000 |
| 13. | விமலை | 2000 |
| 14. | சுநேத்தி | — 2000 |
| 15. | தம்ராதி | — ஒரு தூணியும் ஒரு பதக்கும் |
| 16. | வஜ்ரகல்பவம் | — ஒரு தூணியும் ஒரு பதக்கும் |
| 17. | கல்யாண லவனம் | |

(மேலும் இரண்டு மருந்து வகைகள் குறிப்பிடப்பட்டுள்ளன, அவற்றின் பெயர்களை கல்லிலே வாசிக்க முடியவில்லை.) இத்துடன் ஒரு பதக்கு பதவின் நெய் நிலத்திலே புதைத்து வைக்கப்பட்டது. அப்படிப் புதைத்து வைக்கப்பட்ட நெய் புராணசர்ப்பிக்காகப் புதைக்கப்பட்டதாக குறிப்பிடப் பட்டுள்ளது. புராண சர்ப்பி என்பது பழைய நெய். புதைத்து வைத்து எடுக்கப்பட்ட பழைய நெய் மருந்துக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

இவ்வாறாக இக் கல்வெட்டின் மூலமாகப் பதினோராம் நூற்றாண்டிலே தமிழ் நாட்டில் எவ்வாறு வைத்தியசாலைகள் நடத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதைப் பெருமளவிற்கு அறிய முடிகின்றது. அந்த நூற்றாண்டுக்கு முன்னரும் பின்னரும் இருந்த நிலையை ஓரளவு அறிவதற்கும் இது உதவும்.

*(1968/69 ம் ஆண்டு இளங்கதிர் இதழில் இருந்து எடுக்கப்பட்டது.)*

---


பொன் விழா மலருக்கு எமது மனமுவந்த ஆசிகள்

**இலக்குமி பவான்**

சைவக் ஹோட்டல்

**பிரதான வீதி, ஊர்காவற்றுறை.**

---

RELIABLE PEOPLE

FOR

QUALITY PRINTING


**THANGARAJAH PRINTING WORKS**

**39/3, MANIPAY ROAD — JAFFNA.**

# AYURVEDA — REVIEWED

1925 — 1980

**Dr. E. P. Rasiah J. P.**



"Siddha Vaidia Pradheepam"

**In ancient Ceylon, a system** of Indigenous Medicine of a high order had prevailed. Pulasthia Munivar, an uncle of King Ravana was the Chief Preceptor. of that system King Ravana was himself reputed to be the author of several medical treatises such as "Arkaprakasa" "Naadi Vignanam" " Kawmari — Bhritiyam " etc.

In olden days, Royalty had lent its patronage to this system of indigenous medicine and the status of the Physician was very high, almost next to God. But, consequent to foreign invasions of Ceylon, the western medical system gained ascendency over the indigenous system, which gradually deteriorated and reached a point of extinction. It did not, however, die, as a certain percentage of the population who had implicit faith in its curative qualities, tenaciously kept resorting to it. They believed that Ayurveda was capable of treating the whole man, unlike allopathy which treated merely the particular disease.

## L. A. M. C.

In 1925, the late Dr. J. Bastiampillai, an illustrious son of Jaffna a highly qualified Ayurveda Medical man founded the Lanka Ayurveda Medical College and Siddha Institute in Jaffna — perhaps the first national Teaching Institution to be started in Ceylon. It represented the people's voluntary efforts at imparting Siddha Ayurveda Medical knowledge by giving Institutional training to keen students and producing competent and qualified Siddha Ayurveda Medical Practitioners.

## Govt. Action

Abont the same time, some of the believers of the excellence of Ayurveda, kept agitating that the State should salvage Ayurveda from its static state and place it on its proper pedestal. Accordingly the then Govt. appointed a "Committee" to consider and report "on the ways and means to develop Ayurveda". In 1926, on the recommendation of this Committee an Advisory Board of Indigencus Medicine comprising of—The Hon. K. Balasingan, Sir. D. B. Jayatileka Hon. D. S. Sensnayake, Hon. A. F, Molamure, Hon. A. W. de Silva, and Mr Donald Obeyesekera— were appointed. In 1929. at the instance of this Advisory Board a College of Indigenous Medicine was temporarily opened at "The Bower" in Cotta Road, Borella with about 70 pupils In 1931, this College was moved to the present spacious site at Rajagiriya and the Hon. S. W. R. D Bandaranayaka, the then Minister of Health, took steps to get the Indigenous Medical Ordinance No. 17 passed. Accordingly the College and Hospital of Indigenaous Medicine became full - fledged Govt Institutions. With the enactment of Act No. 31 of 1961, "The Department of Ayurvede" was born The Advisory Board was replaced by three separate Statutory Boards—

1 The Ayurveda Medical Council
2 The Ayurveda College & Hospital Board
3 The Ayurveda Research Committee

## Drug Coporation

In 1967, Mr, Wimal Nawagamuwa, a brilliant Civil Servant commenced officiating as Ayurveda Commnr. He stream - lined the working of most Ayurveda Institutions and brought into being the Ayurveda Drug Corporation to import essential medicinal herbs and drugs,

Both Ayurveda and the Western system of medicine share the common ground in the use of medicinal herbs. While Ayurveda medicines are prepared mostly out of purified extracts and essences from herbs and purified minerals. It is said that the western medicines are prepared mostly ont of purified extracts (and esseries from herbs and minnerale. It is also said that the western medicines are put through naarly 246 quality control tests before being released to the chemists for sale and distribution. In Ayurveda too such quality control tests are desirable. A special Laboretory for quality control tests are likely to be installed at the Navinna Research Centre.

## Kaitadi Ayurveda Hospital

Consequent ro the unceasing efforts of Dr S P E. Innasithamby & Dr M S. Sundaram the Govt Ayurveda Hospital at Kaitadi (Jaffna) was opened The door could be thrown open now for experts and Research scholars to unravel the mysteries of the Siddha system of medicine propounded by our ancient Rishis.

## Congrats!

While the Govt. has taken steps to confer university status to Ayurveda Teaching Institutions, it is heartening to find "The Lanka Ayurveda Medical College and Siddha Institute" in Jaffna — a pueely private Organisation that had withstood the vicissitudes of time facing the storms and stresses, ups and downs for the past 55 years — celebrating its Golden Jubilee on a grand scale. I offer my congratulations to the organisers and wish their efforts all success.

Let us entertain the hope that more and more secrets will be unearthed from the mines of our ancient Siddhars' revelations so that the world's corpus of medical knowledge may be vastly enriched. Let ancient Ayurveda and modern allopathy, without any conflict move together in building up an intergrated Medical system for the benefit of the National Health of a United Republic of Sri Lanka

With a full-fledged minister in charge of Ayurveda and with an earnest and enthuastic Ayurveda Commnr — Mr. P. B Wanninayaka, C. A. S. — Ayurveda will have a glorious future

# SIDDHA AYURVEDA & ITS OUTSTANDING FEATURES

(By Vaidia Jhothi **Mrs.** Rita Innasithamby)



**Siddha Ayurveda is not dying as some would have us believe** Like the moon, it has merely waxed and waned in popularity due to periodical political changes. Although there is unanimity of opinion that we should develop Siddha Ayurveda, there appears to be diversity of views regarding the methods that we should employ.

## Suddha – Siddha

Some Physicians and admirers of the unalloyed, pure Siddha systems hold the view that Siddha Ayurveda is perfect and complete barring a few lost passages here and there and some interpollations that have crept in. They maintain that the texts, methods precepts and recipes cannot be improved upon, nor need they be subjected to any re-verification or modern scientific tests, euphemistically called "Research". They share with our ancients the view that since Siddha Ayurveda is the result of Divine revelations to Siddhars and practical observations by Saints and Seers, no doubt need be entertained about its truth or efficacy, but that it should be believed and accepted like a Holy Writ Siddha Ayurveda, they say, is an age-old science. The principles propounded in its ages before, hold good even today. Properties and potency of medicines prescribed in it can equally benefit human beings in all countries Selfless seekers of Truth, our Rishis and Sages have given us the principles of medical science realised through their efforts and experience, covering a large period of years They have given eternal Truths out of their intuitive experiences Siddha Ayurveda is, therefore, transcendental knowledge and need not be taken to a laboaatory for fresh tests in modern crucibles

## Modern View

This looks ra her a conservative view and cannot be shared by everyone In these progressive days when we have conquered space and reached the moon or e should be free to test check and cross check all ax oms, truths, precepts etc. for; one's own satisfaction We belong to an enligh ened age which ' Will not accept anything without proof and reject nothing without sufficient cause" To think that any science "particularly the one dealing with the live human organism" that is subtle and sensitive to the ever changing environments of time and space, science and civilisation -- can be stat c and be revealed once and for all -- does not appeal to modern minds, nor does it reflect maturity of reasoning wisdom and independence of thought

The sages, who comp led the Truths to Siddha Ayurveda, themselves do not appear to have laid any claim to their finality. They were rather content to merety state the Truths they had discovered in their broad outlines, using their aphoristic style. In fact, Charaka has declared:-

"...That their teaching is like the small quantity of seed-grains scattered by farmers, which though small in its quantity, is rich in potantiality and can produce abundant results" with ancient texts as the basis and guide, the intelligent student of Siddha is expected to reap rich rewards by way of further expansion elaboration and addition both in regard to details and principles that govern the reaction of human organisms in health and disease to Siddha Apurvedic treatment.

## Change

Change is the nature of the world, be it forward or retrograde movement, for, nothing can remain at a stand - still without getting stagnated So, thoughtful and enlightened men - medical and lay -- have from time to time proclaimed how best to rejuvinate Siddha Ayurveda

## Special features of Siddha

Diseases that defied the treatment of Aushada Vaidiyas and had remained In curables ' have later become 'Curables ' yielding to the treatments of the Rasa school of Physicians, who discovered the outstanding feature that every drug and herb increased in potency when combined with mercury and or sulphur Every preparation made by such combinations had become ' a sure cure - all - ' like the proverbial philosopher's stone and this is no fantastic claim.

In such cases, tradition and revelation did not serve as limiting forces, but had given a liberty to launch upon fresh fields of conquest. It is in this spirit that every modern Siddha Ayurvedic student should persevere and practise. The last word on any science has not been said yet by anybody. On the other hand the Sages (I venture to think) expect you to advance into fresh realms of knowledge and to expand the boundaries of science Only by doing so will we be repaying our debt to Rishis and Siddhars of old.

The traditional theory of health and disease the Panchabhuta theory of Doshas and the Rasa-guna veeriya theory et cruce and its co relation to the qualities of body elements though simple, were comprehensive and covered the entire range of human physiology, pathology and therapeuties; yet, they were only the outlines and fresh advances can be discovered from time to time, as the powers of observation in man increased with advance of physical science Thus the aim of medical science should be to find out and make use of the best methods of freeing humanity of disease and keeping them in perfect health. They should not be labelled Western or Eastern but should always be Universal

## Pooling Knowledge

Medical science should have no barriers of systems, of civilization or cultures Eastern or Western Medical treatment must be the common possession of mankind and as such, anything of value, anything which the systems old and new could contribute should be pieced together and placed at the service of suffering humanity The heritage of India coupled with the modern discoveries of the West should produce a systam universal in its application and general in its benefit to humanity The time has come to pool all knowledge and crystallise them into a common system so that the glorious heritage of our fore-fathers, the cream of the indigenous system of medicine could reach its highest stage, viz, Relieve humanity, irrespective of nationality or locality of the sufferer.

## Progress

With the attainment of Independence in Sri Lanka, the Sun of wisdom has begun to shine brightly and show to the world the ancient medical Truths and theories that could save mankind from suffering. Truth is truth by whomsoever it may be stated, whether by a Saint or Sage of old or a commoner of our time. Whatever truths or axioms properly propounded and logically demonstrated are worth one's consideration and trial regardless of who said or did it

Some years back a proposal brought by the late Dr. G. Ovitigale the leader ot the Physicians of South Ceylon. "that a full - fledged Minister should be in charge of Ayurveda" was strongly supported by Dr. E. P. Rasiah on behalf of the Physicians of North Ceylon and was passed unanimonsly. Yet, only new has the U. N. P. Govt implemented it and appointed The Hon'able Dr. Dharmasena Attygalle as the first Minister of Ayurveda in Srî Lanka.

It is hoped under his admistration, Siddha Aruveda too would prosper as it did in the beginningless past and proceed from strength to strength into the eternity of an endless future.

# முகாந்திரம் சமூகசேவையின் கேந்திரம்

சுதேச வைத்திய முன்னேற்றப் பாதையில் முன்னிற்கும் ஈழத்தில், வடக்கே தமிழ் மருத்துவம் தழைத்தோங்குவதற்கென தன்னலம் அற்று அயராது தொண்டாற்றி வரும் சமூகத் தொண்டர் முகாந்திரம், ஈ. பொ. இராசையா அவர்களின் கடந்த கால் நூற்றுண்டுத் தொண்டுகளில் ஒரு சிலவற்றை இங்கு நாம் ஞாபகப்படுத்திக் கொள்வது சாலவும் சிறந்தது.

''தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்ருமை நன்று''

எனத் தெய்வப் புலவன் வகுத்ததற்கு இணங்க இவர்கள் கடமை உணர்ச்சியும், கண்ணியம் மிக்க செயலாக்கத்திலுைம், ஈழம் முழுவதற்குமே ஓர் உதாரண புருடராக விளங்கி வருகிருர்கள். யாழ்ப்பாண நகரின் கண்ணே சைவத்தின் செழிப்பு மிக்க வண்ணுர்பண்ணை என்னும் பகுதியில் கல்வியிலும், இறை பக்தியிலும், சமூகத் தொண்டிலும் மிக்க ஓர் குடும்பத்தில் உதித்தவர்கள்.

அரச சேவையை முடித்துக்கொண்ட சமயம் பொதுப் பணியில் வேகமாக ஈடுபடத்தொடங்கியதை அறிஞர்கள் அறிவார்கள். இவர்களின் நேர்மை, இறைபக்தி, பண்பு, ஆற்றல் இவைகளை உணர்ந்த ஆலய நிர்வாகிகள், ஆலய தர்மகர்த்தாச் சபைகளிற் பணிபுரிய வைத்திருக்கிருர்கள். கூட்டுறவு இயககங்களில் பணிபுரிய வைத்திருக்கின்ருர்கள். உடல் நலத் துறையில் காசரோக தடுப்பு இயக்கம், சென். ஜோன் முதலுதவி இயக்கம், ஆகிய சேவைகளிலும் பணிபுரிய வைத்திருக்கிருர்கள்.

எண்ணரிய செயல் பல புரிந்து இணையற்று விளங்கும் இத்தகைய ஆற்றல், அனுபவம் மிக்க ஓர் தொண்டரை வட-இலங்கை சுதேச வைத்திய சபையில் 25 ஆண்டுகளுக்கு முன் முதன்முதலாகச் சந்திக்கவும் அவரின் பண்புகளை அறியவும் எமக்குச் சந்தர்ப்பம் கிட்டியது.

லங்கா ஆயுர்வேத சித்த மருத்துவக் கல்லூரியின் நிர்வாக சபை உறுப்பினராகக் கால் நூற்றுண்டுகளுக்கு முன்னரே பணிபுரியத் தொடங்கிய காரணத்தால், இக்கல்லூரியின் ஏற்ற இறக்கங்கள் யாவற்றிலும் இவர்களின் வாழ்வு இழையோடி உள்ளதைக்காண முடியும். இவர்களின் உடல், பொருள், ஆவி, சக்திகள் இக்கல்லூரியில். இரண்டறக் கலக்கப் பட்டு வந்திருப்பதைக் காணலாம்.

1961ம் ஆண்டு 31ஆம் இலக்க ஆயுள்வேதச் சட்டம் நடைமுறைக்கு வரப்பட்ட சமயம் நிர்வாக சபையில் இவர்கள் ஓர் உணர்ச்சிமிக்க

முக்கிய உறுப்பினராவர். இக்கல்லூரியின் எதிர்காலம் அச்சமயம் ஓர் முக்கிய திருப்பத்தில் தேங்கி நின்றது. ஒவ்வொரு முக்கிய திருப்பங்களிலும் சுகாதார அமைச்சர்பாற் சென்றும், பல சித்த மருத்துவ தூதுக் குழுக்களுக்குத் தலைமை ஏற்றும், இக்கல்லூரிப் பாதுகாப்புக்கும், வளர்ச்சிக்குரிய தீர்மானங்களை அவ்வப்போது மனுக்கள், தந்திகள் மூலம் அரசுக்கு அனுப்பியும் வந்துள்ளார்கள். இவற்றைத் தொடர்ந்தே இக்கல்லூரிக்கும் இக்கல்லூரியில் கற்றுவரும் மாணவர்களுக்கும் ஓர் அரச அந்தஸ்து ஏற்பட்டது எனலாம். இச்சமயம் ஆயுள்வேத சபையினர் இவர்களை, மருத்துவர்களின் பதிவேட்டுப் பட்டியலிலும் பதிந்து கௌரவித்து, ஆயுள்வேத சபையிலும் பணிபுரிய அழைத்தார்கள்.

சித்த ஆயுள்வேத மருத்துவ வளர்ச்சிக்காக பல்வேறு கட்டுரைகளை அவ்வப்போது பத்திரிகைகளில் வெளியிடப்பட்டதுமன்றி, பல வெளியீடுகளைப் பதிப்பித்து இலவசமாகவே வினியோகித்தார்கள். இவரின் இலவச வெளியீடுகள் கடல் கடந்த நாடுகளில் எல்லாம் பரவியுள்ளன.

தமிழ் பகுதிகளில் மட்டுமன்றி தென்பகுதிச் சிங்கள மருத்துவரிடையேயும் பெரும் செல்வாக்குப்பெற்றுர். சிங்களமொழியில் உள்ள பேச்சுவன்மை, கேட்பவர்களிடை களிப்பையும், கைதட்டலையும் தரக்கூடியதாக உள்ளது.

கொழும்பு, களனியா, நுவரெலியா, வவுனியா ஆகிய இடங்களில் நடைபெற்ற சுதேசவைத்திய மகாநாடுகளில், சிறப்பு விழாக்களிலெல்லாம் சித்தமருத்துவர்களின் பிரதிநிதியாகவே அழைக்கப்பட்டிருந்தார். சுகாதார அமைச்சிஞல் நடாத்தப்பட்ட ஆலோசனைக் கூட்டங்களில் இவரது ஆலோசனைகள் முக்கிய இடம் பெற்றன.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர்களாக கடமையாற்றிய அரசாங்க அதிபர்களிடையே நம்பிக்கை உடைய ஓர் அன்பனுக மதிக்கப்பட்டார். அகில இலங்கை ஆயுள்வேத மருத்துவர்களின் சம்மேளனத்தில் இவர்களது சேவை போற்றிப் பாராட்டப்பட்டதுமன்றி, 'ஆயுள்வேத வைத்திய பிரதீபம்'' எனும் பட்டத்தை அளித்துக் கௌரவித்தார்கள்.

1974ஆம்' ஆண்டு நடந்தேறிய 4வது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் சித்த மருத்துவத்துறை மிக பிரபல்யமாகவும், பயனுள்ளதாகவும் அமைந்ததற்கு இவர்களே முக்கிய காரணமாகும். சம்மேளனத்தின் 12வது வருட மலரில் குறிப்பிடும்போது ''சம்மேளன அமைப்பாளர் முகாந்திரம் ஈ. பொ. இராசையா அவர்களது அயராத உழைப்பும் செயல் திறனும் இக்காட்சி சிறப்புற நடைபெறுவதற்குக் காரணமாக இருந்தன'' எனப் புகழாரம் சூட்டி இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

1975ஆம் ஆண்டு வவுனியாவில் நடந்தேறிய "ஸ்ரீலங்கா விஷ மருத்துவ சம்மேளனத்தின் 2வது மகாநாட்டில் உரையாற்றிய வவனியா அரசாங்க அதிபர், திரு. எஸ்.சிவஞானம் அவர்கள், "நண்பர் முகாந்திரம் ஈ. பொ. இராசையா அவர்கள் சித்த ஆயுள்வேத அபிவிருத்தி முயற்சிகளுக்குச் சேவையாற்ற முன்வந்தது, இத்துறை மருத்துவத்திற்கு நல்ல ஓர் எதிர்காலம் இருப்பதை தெளிவுபடுத்துவதாகவும். அவர்களது சிந்தனைகள் வெற்றி அடைந்து வந்துள்ளதை தான் பல தடவைகளில் கண்டிருப்பதாகவும், இவ்விழாவின் சிறப்பும், அவரது சிந்தனையின் வெற்றியாகுமெனவும் கூறினார்கள்."

அரசினர் ஆயுள்வேதக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பண்டிற் வில்லியம் அல்விஸ் அவர்கள் குறிப்பிடும்பொழுது:-

"Muhandram E. P, Rasiah indeed deserves the gratitude of all Ayurveda Physicians for having made known to the ordinary laymen the potential virtues of Ayurveda and as a cheaper method of extending Medical Service to suffering humanity to remote village areas, than the western system of medicine which would cost any Govt. a huge sum of money"
என இவர்களின் சேவையைப் பாராட்டியுள்ளார்கள்.

எனவே சிறிதும் சுயநல நோக்கின்றி தனது வருவாயில் ஒரு பகுதியை சித்த மருத்துவ வளர்ச்சிக்கே ஈந்துவரும் ஏந்தலாம். 'முகாந்திரம்' அவர்களது தூய தொண்டினைற் களங்கம் காண்பவரோ அன்னவரது புகழின் கண் அழுக்காறுற்று அயலிடத்தில் பழித்துரைக்கும் இழிபிறவிகளே.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்"

என்ற வள்ளுவன் நீதிக்கேற்ற குணமுடன் திகழ்ந்து வருகிறார்கள்.

கடமையுணர்ச்சிமிக்க முகாந்திரம் அவர்களது கண்ணியம் மிக்க செயலாக்கத்தினால், இந்நாட்டின் நாலாபக்கத்திலும் "மாதிரித்தொண்டினால்" விளங்கிவருவதொன்றே அவரளிக்கும் அழியாச் செல்வமாகும் என்பதை அகமகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

வாழ்க அவரது புகழ்; வளர்க அவர்தம் தொண்டு.

டாக்டர் நா. இரத்தினசபாபதி

# சுதேச வைத்தியத் துறையின் வளர்ச்சிப் பாதை.....

டாக்டர் திருமதி S. தியாகராஜா
விரிவுரையாளர் ல. ஆ. வை. கல்லூரி

மருத்துவ உலகில் சரித்திர காலத்துக்குட்பட்டவற்றில் அராபிய இந்திய உரோம கிரேக்க வைத்திய முறைகள் குறிப்பிடத்தக்கனவாகும். இவற்றில் இந்திய அராபிய முறைகள் மேலும் வளர்ச்சியுடன் காணப்பட்டன. அவை இரண்டும் வெவ்வேறு முறையில் வளர்ந்தவையாகும். கி. பி. 14-ம் நூற்றாண்டின் பின் ஆங்கில மருத்துவம் தோன்றுவதற்கும் வளர்வதற்கும் இம் முறைகள் பெரிதும் உதவியுள்ளன.

இந்திய மருத்துவ முறையானது இன்றில் இருந்து 5-ம் 6-ம் நூற்றாண்டுகட்கு முன்பு வரையில் மிகச் சிறந்த முறையால் கைக்கொள்ளப்பட்டு வந்தது. இன்றுள்ள ஆங்கில முறையின் வளர்ச்சியினை அன்று இந்திய மருத்துவ இயல் பெற்றிருந்தது. அவை வேதாசாரமாகவும் வேதத்தின் ஒரு பகுதியாகவும் கொள்ளப்படுகின்றது. இத் துறை சார்ந்த ஏடுகள் தேவபாஷை எனப்படும். சமஸ்கிருதத்திலேயே இயற்றப்பட்டிருந்தன. சமஸ்கிருதம் கடினமான பாஷையாகவும் எல்லோராலும் இலகுவில் கற்றுக் கொள்ள முடியாததாகவும் இருந்தது. ஆகையால் இந்திய மருத்துவ முறையானது ஒரு சில கல்விக் குடும்பங்களுக்கான தனிச் சொத்தாக விளங்கி வந்தது. அம் மருத்துவ குடும்பங்கள் (Colegez) இம் மருத்துவ முறை பற்றி ஆக்கபூர்வமான சிந்தனைகளை வெளியிடவோ அல்லது இக்கலை பற்றி ஏனையோருக்குத் தெரியப் படுத்தவோ முன்வரவில்லை. அத்துடன் தொடர்ந்து வந்த அந்நிய ஆதிக்கத்தில் இருந்தும் இக்கலைகள் சிறந்த முறையில் கவனிப்பாரற்றுப் போய் விட்டது.

அந்நியராட்சிக்கு முற்பட்ட மன்னராட்சி காலத்தில் சுதேச வைத்திய முறை மிக உன்னத நிலையில் விளங்கியது. அரச உதவிகளும் நிறையக் கிடைத்தன. தமிழ் நாட்டில் சித்த ஆயுள்வேத வைத்தியர்கள் சூதூர்கள் என அழைக்கப்பட்டனர். அரசர்களால் பெரிய அளவிலான ஆதுர சாலைகளும் நடத்தப்பட்டன. அத்தகைய சாலைகட்கு வேண்டிய செலவுகள் அனைத்தையும் அரசர்களே பொறுப்பேற்றிருந்தனர். வைத்தியர், தலைமை வைத்தியர் ஆகியோருக்கான சம்பளம் ஏனைய அரச நிர்வாகத்தில் உள்ள ஊழியர்களை விட அதிகமாகவே இருந்தது. அவ் வைத்திய சாலைகளில் பணிப் பெண்கள் (Nurse), காவலாளிகள் துப்பரவு செய்பவர்கள், மருந்து தயாரிப்பவர்கள், மூலிகை தேடுபவர்கள் போன்றவர்களுக்கான நியாயமான ஊதியம் வழங்கப்பட்டதுடன், அவ் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறுபவர்கட்குத் தேவையான உணவு, பால் போன்றவையும் சிறப்பான முறையில் வழங்கப்பட்டன. அத்துடன் மருத்துவ ஆராய்ச்சிக்கும் தனிப்பிரிவுகள் அமைக்கப்பட்டிருந்தன.

அக்காலத்தில் அறுவை சிகிச்சை (சல்லியம்) முறைகளும், விருத்தியடைந்திருந்தன. சிறப்பான மருத்துவ நூல்கள் சமஸ்கிருதத்தில் இருப்பதால் அந்நூல்களைக் கற்றுணர்ந்த ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் உடல்களை (இறந்த மனிதரை) வெட்டுதல் கிழிதல் போன்றவற்றைச் செய்யவும் பின்னின்றனர். ஆனால் இவ் அறுவை சிகிச்சை முறையானது. அக் குறிப்பிட்ட வகுப்பினருக்கும் பணிவிடை செய்பவர்களால் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டது. இதன் காரணமாகவே சல்லியக் கிரிகைகள் அதிகளவில் வெற்றி பெற முடியாதிருந்தது. அறுவை சிகிச்சை முறையை ஆங்கிலேயர்கள் அராபியரிடமிருந்து அறிந்து கொண்டனர். அக்காலத்தில் மிகப் பிரபல்யம் அடைந்திருந்த ரண சிகிச்சை முறை இன்று அருகிவிட்டது. ரண வைத்தியத்தின்

ஆங்கில மருத்துவத்துக்கு ஈடுசெய்யும் முறைகள் நடைமுறையில் அருகிவிட்டன. பண்டைய காலத்தில் வேல் பாய்ந்த புண்கள் கூடத் தகுந்த மருத்துவமூலம் இலகுவில் சிகிச்சிக்கப்பட்டன என்று இலக்கியச் சான்றுகள் மூலம் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆகவே புராதன ரண சிகிச்சை முறைகள் மீண்டும் புனரமைக்கப்பட்டது. நடைமுறைக்கு கொண்டு வரப்படவேண்டும். அதற்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகின்றது.

அராபிய கிரேக்க வைத்திய முறையில் அறுவை சிகிச்சை முறையை, உடற்கூற்றியல் (Anotomy) போன்றவை வளர்ச்சியடைந்ததற்கு ஒரு காரணம் கூறப்படுகின்றது. இறந்த அராபிய மன்னர்களினதும் பிரபுக்களினதும் உடல்கள் பதப்படுத்தப்பட்டு (Em'aming) நீண்ட காலத்துக்குப் பாதுகாத்து வைக்கப்பட்டு வரும் வழக்கம் இருந்து வந்தது. இதனால் உடல்களை வெட்டுவதும் கீறுவதும் இலகுவான காரியமாகப் பட்டதுடன், அவற்றின் மூலம் உடல் அமைப்புக்களையும் உள் உறுப்புக்களையும் தெளிவாக விளங்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இருந்தன. ஆனால் இந்திய மருத்துவ முறையில் இதற்கு நேர்மாறான முறையே காணப்பட்டது. வைத்திய முறைகளைக் கற்றுணர்ந்த நிபுணர்களாக விளங்கிய ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் இத்தகைய செயல் முறைகளைத் தங்கள் வாழ்க்கை நெறிக்கு ஒவ்வாதென ஒதுக்கி வைத்தனர். இதனால் அக்கலை அப்படியே குன்றக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. இத்துறை மீண்டும் புனரமைக்கப்பட வேண்டியது மிக அவசியமாகின்றது. அண்மைக் காலம் வரையில் கூட இந்திய மருத்துவத் துறையில் பயன்படுத்தும் உபகரணங்கள் காலத்துக் கேற்ப நவீனப் படுத்துவதற்காக தொழில் நுட்பவியலாளனையோ, எந்திரவியலாளரையோ, எந்திரவியலாளரையே நாடுதல் அவசியமாகக் காணப்படுகின்றது.

ஆயுர்வேத மருத்துவத்தின் மருந்து தயாரிப்பு முக்கிய பங்கு வகித்து வருகின்றது. ஆனால் தயாரிப்பு முறைகள் முழுமையாக, விஞ்ஞான ரீதியாக, நிறுவன ரீதியாக ஒழுங்கு படுத்துவது அவசியமாகும். இத்தகைய குறைபாட்டினால் அரிய பல முறைகள் நலிந்து போயின. பழைய மருந்தியலாளரின் கண்டுபிடிப்புக்களும், ஆய்வு முறைகளும் குரு-சீடர் பரம்பரையாகவே போஷிக்கப்பட்டு வந்தால், அவை அவர்களுடனேயே மறைந்துவிடக் கூடிய தன்மை இருந்தது. இதன் காரணமாக சில அரிய மருத்துவ விஞ்ஞான நூல்கள் தகுந்த பாதுகாப்பின்றி அழிந்து போயின. மேற்படி நிலைமையில் எஞ்சியதைத் தொடர்ந்து பேணிவந்த பரம்பரையினராலும், அவர்களின் உறவினர் நண்பர்களாலும் சில நூல்கள் பாதுகாக்கப்பட்டன. இத்தகைய வழியில் பாதுகாக்கப் பட்டவையே தற்போது கிடைக்கும் நூல்களாகும்.

மேற்கத்தியவைத்திய துறையில் மருந்தியல் துறைத் தனிப்பகுதியாக வளர்ந்து வந்ததால் அது வைத்தியத்துறைக்குப் பெரும் உதவியாக அமைந்தது. ஆங்கில மருந்து தயாரிப்பு முறைக்கு இரசாயனவியலின் வளர்ச்சியும் கண்டுபிடிப்புக்களும் குறிப்பிடத்தக்க அளவு பங்கினைவகித்து வந்தது. அதே நேரத்தில் பௌதிகவியல் தாவரவியல் ஆகிய துறைகளும் சமாந்தரமாக வளர்ந்து வந்ததனால் அவர்கள் தமது முயற்சியில் சிறந்த வெற்றியீட்டக்கூடியதாக இருந்தது. 14ம் நூற்றுண்டிற்குப் பிறபட்ட காலத்திலேயே ஆங்கில மருத்துவமுறை வளரத்தொடங்கியது. அப்போதைய அதன் வளர்ச்சிக்கு அராபிய சித்தவைத்திய முறைகளே கருவூலமாக அமைந்தன. கீழைத்தேய அறிவினை அவர்கள் தமக்கு இலவசமாகப் பயன்படுத்திய அளவுக்கு இவர்கள் அவர்களுடைய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களை தமது ஆராய்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அப்படிப் பயன்படுத்தி இருப்பார்களேயானால் ஆங்கில முறைக்குச் சமானமாக ஏன் இன்னும் உயர்வாகக்கூட இந்திய மருத்துவத்துறை வளர்ச்சியடைந்திருக்

கும். இன்றும்கூட புதுப்புது வகையான ஆங்கில மருந்துக்கள் முன்னேற்றமான வகை யில் தயாரிக்கப்படுகின்றன. ஏற்கனவே பாவனையில் இருக்கும் மருந்துகள்கூட ஆராய்ச்சியின் விளைவாக முன்னேற்றமான வகையில் தயாரிக்கப்படுகின்றன. அவற்றையெல்லாம் உலகெங்கும் பரவியுள்ள வைத்தியர்கள் அதன் விவரணக் குறிப்புமூலம் ('it r ture r') மூலம் அறிந்துகொண்டு உபயோகிக்கின்றனர். ஆனல் ஆயுள் வேதமுறையில் மருந்துக்கள் இவ்வாறாக இரசாயன பௌதிக பரிசோதனைகள் மூலம் பகுத்து ஆராயப்பட்டு விளக்கப்படவில்லை. எனவே மூலிகை கள் தாவரவியல் ஆராய்ச்சிக்கும் பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டு விஞ்ஞான ரீதியில் பௌதிக ரசாயன குணங்களின் அடிப்படையில் இனங் காணப்பட்டு மருந்துகள் தயாரிக்கப்படவேண்டியது அவசியமாகின்றது. அநேகமான மூலிகைகட்கு வாகடங்களி லும் வேறு மருத்துவ நூல்களிலும் தனிப்பாடல்களே விவரணக்குறிப்பாக (literative ?r) ஆக அமைந்துள்ளது. இம்முறை கடினமானதாக இருப்பதால் இலகுவாக்கப்பட வேண்டியது முக்கியமாகும். மருத்துவக் கல்லூரிகளினது பாடத்திட்டங்களும் இவ்வ கையிலேயே அமைய வேண்டும். புதிய இளம் ஆராய்ச்சியாளர்கள் இத்துறையில் புகுந்து தமது உழைப்பினையும் அறிவினையும் செலுத்தவேண்டும். மருத்துவக் கல்லூரிக ளில் இத்துறைக்கெனத் தனிப்பிரிவுகள் அமைப்பதன் மூலம் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தலாம்.

மருந்து தயாரிப்பு பற்றியவை பெரும்பாலும் பண்டைய முறையிலேயே உள் ளன. விஞ்ஞானரீதியில் அவை நவீனப்படுத்தப்பட்டால் ஒரு முன்னேற்றத்தை உண் டாக்கக் கூடியதாக இருக்கும். பண்டைய முறையில் குருசிட பரம்பரையில் வந்தவர் களாலேயே அவற்றைச் சரியாகப்புரிந்து கொள்ளவும் செய்துகொள்ளக் கூடியதாகவும் உள்ளது. இப்பரம்பரைமுறைகள் இன்று குறைந்து, நிறுவன ரீதியான மருத்துவக் கல்லூரிகள் வளர்ச்சிபெற்று வருவதால் புராதன முறைகளும் காலத்திற்கேற்றபடி நவீனப் படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். உலகெங்கும் சிதறிக்கிடக்கும் அறி வியல் நூல்கள் ஒருங்கிணைக்கப்பட்டு சிறந்த முறையில் பாடத்திட்டம் அமைக்கப்பட வேண்டியது இத்துறையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவி, அத்துறை ஓர் உன்னத நிலையை அடையக்கூடியதாக இருக்கும் இன்றைய அறிவியல் தேக்கமானது மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. ஆகவே இத்தகைய யுகத்தில் வாழ்பவர் கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையில் வைத்திய முறைகளும் மாற்றியமைக்கப்பட வேண்டியது அவசியமாகும். அனுமான வகைகளைத் தேடித்திரிந்து எடுப்பதை இலகு வாக்கப்படுவதோடு, மருந்துகளும் கவர்ச்சியான நிறமும் இதமான மணமும் கொண் டவையாக அறிமுகப்படுத்தப்படவேண்டும். உருவத்தில் சிறியதும் கடினமானதுமான குளிகைகள் நவீனப்படுத்தப்பட்டு எளிதில் ஜீரணிக்கக்கூடிய வகையில் தயாரித்தல் நன்று. சூரணங்களாக உட்கொள்ளப்படும்போது அவை வசதியாக நியம அளவில் (capsul ) பாவிக்கக் கூடிய முறையில் அமையவேண்டும். இம்முறையில் அவை நவீனப் படுத்தப்படும் பொழுது, எமது சித்த ஆயுர்வேத வைத்தியமும் உலக மக்களால் இலகுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, உலகெங்கும் பயன்படுத்தப்படும்.

ஆயுர்வேத வைத்தியர்கள் இன்றைய சமூகத்தில் ஓர் உயர்ந்த அந்தஸ்தைப் பெறவேண்டுமாயின் அவர்கள் தமது துறையில் ஆழ்ந்த நுட்பமான அறிவைப் பெறு வதுடன் ஆங்கில அறிவிலும் கூடிய புலமை பெற்றிருத்தல் அவசியமாகும். வேற்று மருத்துவ முறைகளையும் அவற்றின் புதியகண்டுபிடிப்புக்களையும் அறிந்து கொள்வதற்கு ஆங்கில அறிவு அவசியமாகின்றது. எந்த வகையில் திருத்தமும் அபிவிருத்திகளும் அவ சியமோ அந்தவகையில் செம்மையாகச் செயல்படுத்தப்படுமானல் எப்படி சீன வைத் தியமுறை இன்று மேலைத் தேசத்தவர்களாலும் ஏற்கப்பட்டு உலகப்புகழ் பெற்றதாகக் காணப்படுகின்றதோ, அப்படியே சித்த ஆயுள்வேத வைத்தியமும் உலகமக்களால் ஏற் கப்பட்டு புகழ்பெற்று விளங்கும். இளம் ஆராய்ச்சியாளர்கள் புத்துணர்வுடன் செயல் படுவார்களாயின் ஒளிமயமான அந்த எதிர்காலம் மிக அண்மையிலேயே காணப்படும்.

ஆதாரம்: ராஜேந்திரன் காலத்து கல்வெட்டு

கலை விஞ்ஞானம் வர்த்தகம்

மற்றும் மேற்படிப்புகளுக்கு
திறமிக்க பட்டதாரி ஆசிரியர்களினால்
கற்பிக்கப்படும்.

# திருவள்ளுவர் கல்விக் கழகம்

# THIRUVALLUVAR ACHADAMY

(லங்கா ஆயுர்வேத கல்லூரி மண்டபம்)

---

## நன்றி கூறுகிறோம்

- மலர் சிறப்புற ஆசியுரை, வாழ்த்துரை வழங்கிய பெரியார்களுக்கும், அரிய கட்டுரைகள், கவிதைகள் வழங்கிய அறிஞர்கட்கும், எமது கல்லூரி மாணவர்கட்கும்
- வேண்டிய நேரத்திற்கெல்லாம் எமக்கு ஆலோசனை தந்துதவிய பெரியார்களுக்கும்
- எம்மை அன்புடன் வரவேற்று விளம்பரம்கொடுத்து, உங்கள் கையில் இம்மலரைத் தவழச் செய்த வர்த்தகப்பெருமக்களுக்கும்,
- குறுகிய காலத்தில் விழாமலரை அழகுற பதிந்து தந்துதவிய யாழ் தங்கராஜா அச்சகத்தாருக்கும்
- விழா சிறப்புற கலந்துகொண்ட பிரதம அதிதி, அறிஞர்கள், பேச்சாளர்கள், பெருமக்கள், எமது கல்லூரி மாணவர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்மவான நன்றி உரித்தாகுக.

நன்றி !

விழாக்குழு.

சகல ஆங்கில மருந்து வகைகட்கும்

பரணி மருந்துச் சாலை

ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.

கோவில்திருவிழாக்கள், திருமணவிழாக்கள், புதுமனைப் பிரவேசம்
புதுமனைக்கு அத்திவாரமிடல் போன்ற சகல
வைபவங்களுக்கும்

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

மருந்து, மருந்து சரக்கு, வாசனைதிகள் வியாபாரம்

53 (191) 55 (193) கே. கே. எஸ் வீதி
பெரியகடை யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 541.

160, செட்டியார் தெரு,
கொழும்பு - 11
தொலைபேசி: 35825

அன்பளிப்பு:

Specialists for: All Kinds of Turning Works, Moulding of Water Pumps & Launch Parts & Etc.

# VINAYAKA TURNING WORKS

விநாயக ரேர்ணிங் வேர்க்ஸ்

202. (30) STANLEY RD.
JAFFNA.

Prop:- *M. PAKKIYANATHAN.*

With best Compliments from;

## DAYANEY ELECTRICALS
## & DAYANE INDUSTRIES

**222** & **245**, *Stanley Road,*
*JAFFNA.*

*Phone:* 7772

RESIDENCE, Veemankamam
TELLIPPALAI.

Prop: A. S. ANTHANYPPILLAI

We Undertake to Repair all kinds of Diesel Engines, Fuel Pumps & Injectors
Specialist in Crank Shaft Re-Grinding and Re-Boring

# Geetha Diesel Engineers

338. STANLEY RD, - JAFFNA.

*Dealers in: LISTER SPARES* *Prop. W. S. C. FONSEKA*

BEST WISHES FROM;

# ESWAR CORPORATION

18, STANLEY RD.
JAFFNA.

Phone:- 7308

*With Compliments From:*

★

# Raj Motors Stores

**Stanley Rd. JAFFNA.**

அன்பளிப்பு

போத்தல் பித்தளை இரும்பு
போன்ற சகல பொருட்களும் வாங்க, விற்க
சிறந்த இடம்

# KAMALA STORES

23/12. STANLEY RD. JAFFNA.

*With the Best Compliments From:*

# SRI DURGA HARDWARE STORES

125, STANLEY ROAD - JAFFNA.

*With best Compliments from;*

# NEW LANKA TRADERS

222, STANLEY RD JAFFNA

ஜோன்சன் அவுட்போட் மோட்டர் விற்பனையாளர்கள்


EVELYN RUTNAM INSTITUTE
218
REFERENCE
LIBRARY
JAFFNA


சகல கல்விக்கும், கலை, வர்த்தகம், விஞ்ஞானம் போன்ற

உயர்கல்விக்கும்

# VICKNA TUTION CENTER

52, STANLEY RD JAFFNA

லங்கா ஆயுர்வேத வைத்தியக்

வைத்தியக் கல்லூரியின்

பொன்விழாவிற்கு

எமதுவாழ்த்துக்கள்

சகல ரோகங்கட்கும்

*Dr. S. SRIVIGNESWARAH. D. A. M.*

*(Medical Regi tar)*

**Sivasakthi Medical Clinic**

KANDY RD JAFFNA

பாவனையாளர்களே! வியாபாரிகளே விவசாயிகளே!

உங்கள் தேவைகள் எதுவானாலும் தொடர்பு
கொள்ளுங்கள்

Hermes தட்டச்சு யந்திரங்கள்

Aloha பாதணிகள்

Union 250 கிலோகிராம் மேடைத்தராசு

மெற்றிக் அளவுமுறைப் படிகள்

பூட்டுக்கள், நீரிறைக்கும் யந்திரங்கள்

கல்குலேட்டர்கள்

விவசாய ரசாயன தெளிகருவிகள்

மின்னியல் பொருட்கள்



**HAMILTON**
**Bicycle**
Rs. 800 00

**Duco Dulux Pentalite**
சகல பெயின்ற் வகைகளுக்கும்

## சாமுவேல் சன்ஸ் அண் கோ லிமிட்

206, 208, ஆஸ்பத்திரி வீதி (போன்: 462) யாழ்ப்பாணம்

யாழ் தங்கராஜா அச்சகம்